
# உலகத்தமிழ்

திங்கள் மின்னிதழ்

திசம்பர் 2022



நாட்டுப்புறக்கலை – காவடியாட்டம்



# அட்டைப்பட விளக்கம்...

## காவடியாட்டம்...

தமிழகத்தில் நிகழ்த்தப் பெறும் நாட்டுப்புறக் கலை வடிவங்களில் குறிப்பிடத்தக்கது காவடியாட்டம். காவடியில் பொருள்களைச் சுமந்து செல்லும் பழக்கமானது, பின்பு ஒரு சிறப்பான ஆட்டக் கலை வடிவமாக வளர்ச்சி பெற்றது. காவடியைத் தோளில் சுமந்து இசைக்கேற்ப ஆடப்படும் ஆட்டம் காவடியாட்டம் என்று அழைக்கப்படுகிறது.

காவடி என்பது இரு முனைகளிலும் உரிபோல் பொருள்களைக் கட்டித் தொங்கவிடப்பட்ட ஒரு தண்டினைத் தோளில் வைத்துச் சுமப்பதாகும். காவடி என்ற சொல் இலக்கியங்களிலும் காணப்படுகின்றது. கிராமப்புறங்களில் ஆற்றிலிருந்து நீர் எடுத்து வருவதற்கு இம்முறை பயன்படுகின்றது.

தமிழர்களின் வாழ்வு தொடங்கிய இடம் குறிஞ்சி நிலமாகும். குறிஞ்சி நிலக் கடவுள் முருகன். ‘குன்றுதோறும் குமரன்’ என்னும் சொல்லுக்கேற்ப முருகனின் வழிபாட்டுத் தலங்கள் அறுபடை வீடுகள் அனைத்தும் மலையிலே இடம்பெற்றன. முருகனை வழிபட மக்கள் அனைவரும் மலைமேல் ஏறிச் செல்ல வேண்டிய சூழ்நிலை உருவானது. வழிபாட்டுப் பொருள்களைக் காவடியின் இருபுறங்களிலும் கட்டித் தூக்கிச் செல்வர். அவ்வாறு தூக்கிக் கொண்டு மலையேறும் போது களைப்பு ஏற்படாமல் இருக்கப் பாடல் பாடிக் கொண்டே சென்றனர். அப்பாடல்களே பின்னர் ‘காவடிச் சிந்து’ என அழைக்கப்பட்டது. அண்ணாமலை ரெட்டியார் முருகனைப் பாடிய காவடிச் சிந்து மிகவும் புகழ் வாய்ந்தது.





மலர் – 3 | இதழ் – 4 | திசம்பர் 2022

உலகத் தமிழ்ச் சங்கம் மதுரையின்

# உலகத்தமிழ்

## திங்கள் மின்னிதழ்


**ஆசிரியர்**

முனைவர் **ப.அன்புச்செழியன்**
இயக்குநர்,
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

**துணை ஆசிரியர்கள்**

முனைவர் **சு.சோமசுந்தரி**
ஆய்வறிஞர்

திருமதி **ஜ.ஜான்சிராணி**
ஆய்வு வளமையர்

**செய்தி ஆசிரியர்**

முனைவர் **சி.புவியரசு**
மின்னிதழ் உருவாக்குநர்

**இதழ் வடிவமைப்பு**

திருமதி **பெ.செல்வராணி**
கணினி செயல்முறையாளர்

தொடர்புக்கு

0452-2530766/2530799

utsmdu2@gmail.com

Uts Mdu

@TamilUlaga

உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

**அட்டைப்பட ஓவியம்**

ஓவியர் **அ.கண்ணன்,** மதுரை

**முகவரி**

**இயக்குநர்,**
**உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை**
மருத்துவர் தங்கராசு சாலை,
சட்டக்கல்லூரி அருகில்,
மதுரை – 625 020.


அன்புள்ள நண்பர்களே!

வணக்கம்,

உலகத் தமிழர்களின் குரலாகவும் தமிழ் அமைப்புகளின் ஒருங்கிணைப்பாகவும் இயங்கி வருகின்ற மதுரை உலகத் தமிழ்ச் சங்கம் தொடர்ந்து தமிழ்ப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றது. தனக்கான பாதையில் உலகளாவிய நிலையில் நடைபோடுகிறது. அயலகத் தமிழறிஞருக்கான விருதுகள், அயலகத் தமிழ் நூல்களுக்குப் பரிசு வழங்குதல் உள்ளிட்ட பல திட்டங்களைப் பெற்றுச் செயல்படுத்தி வருகிறது. உலகத் தமிழர்களுக்கும் தமிழ் இலக்கியத்துக்கும் களம் அமைத்துக் கொடுக்கின்ற வகையில் ‘உலகத்தமிழ்’ எனும் காலாண்டிதழையும் திங்களிதழையும் வெளியிட்டு வருகின்றது. அந்த வகையில் டிசம்பர்த் திங்களிதழ் டிசம்பர்ப் பூக்கள் மலருவது போல தமிழ்மணம் பரப்பி மலர்ந்துள்ளது.

இம்மாத இதழ் தரமான ஆய்வுக்கட்டுரைகளையும் கவிதைகளையும் மொழிபெயர்ப்புக் கவிதைகளையும் உத்தரகாண்ட் தமிழ்ச் சங்கம் பற்றிய ‘சங்கச் சுவடுகள்’ பகுதியையும் ‘மன அமைதி’ எனும் தலைப்பிலான ‘துளிர்க்கும் சருகுகள்’ பகுதியையும் ‘பழமொழி–புதுமொழி’ எனும் தலைப்பிலான ‘இலக்கியப் பேழை’ பகுதியையும் ‘இலக்கிய நேர்மை’ எனும் கட்டுரைத் தொகுப்பு நூலுக்கான விமர்சனத்தைத் தாங்கியும் வெளிவருகிறது. இதழை வாசித்துப் பகிர்ந்து மகிழ்ந்திடுவீர்!

நன்றி!

முனைவர் ப.அன்புச்செழியன்
ஆசிரியர்

## உள்ளே


1. குறுந்தொகையும் சமூகவியலும் (பகுதி – 1) – 5
2. நிலைக் கண்ணாடி..! – 9
3. மணிமேகலை உ.வே.சா.பதிப்பு – 10
4. துளிர்க்கும் சருகுகள்... – 14
5. பத்துப்பாட்டு பாடல்களின் தொன்மையும் இலக்கிய நயமும் (தொடர்ச்சி) – 15
6. சித்திரம் பேசுதடி..! – 18
7. வள்ளுவமும் இஸ்லாமும் போதிக்கும் நாவடக்கம் – 19
8. ஒளிமயம்! – 22
9. சங்கச்சுவடுகள் – 23
10. உள்ளம் பெருங்கோவில் ஊனுடம்பு ஆலயம் – 26
11. இலக்கிய நேர்மை – 27
12. காலம் மாறிவிட்டது..! – 30
13. பொய்மையும் வாய்மையுடைத்து (சிறுகதை) – 31
14. திங்களும்... சிறப்பும்... – 33
15. தடம்... – 36
16. இலக்கியப் பேழை – 37
17. அறிவிப்பு – 39

# குறுந்தொகையும் சமூகவியலும்

## (பாலைத்திணைப் பாடல்களை முன்வைத்து)

### பகுதி–1

முனைவர் **ப.சு.மூவேந்தன்**
அண்ணாமலை நகர்

**முன்னுரை**

செவ்வியல் இலக்கியத்தின் செம்மாந்த வளம்பெற்ற நூல்களில் குறுந்தொகை தனித்துவம் மிக்கது. குறுகிய அடிகளில் செறிவான இலக்கிய நயம்கொண்ட பாடல்களைக் கொண்டது. தொல்காப்பியப் பொருளிலக்கண மரபுகளுக்கு இலக்கியமாகத் திகழும் பேறு பெற்றது.

சங்க காலத்தில் இயற்கையோடு இயைந்து வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறை இயற்கைப் புனைவுடன் இந்நூற் பாடல்களில் வெளிப்படுத்தப்பட்டு உள்ளன.

"குறுந்தொகையின் ஒவ்வொரு பாடலும் சங்கச் சமூக வாழ்வியலில் நிலைபெற்ற கூறுகளான நட்பு, காதல், கற்பு, இல்லறம், பண்பாடு, பொருளியல் வாழ்வு, சமூக மேம்பாடு ஆகியவற்றைப் படம்பிடித்துக் காட்டுகின்றன" என்ற கருதுகோளை முன்வைத்து இக்கட்டுரை அமைகின்றது.

அகவாழ்விலும் புறவாழ்விலும் சமூகநெறிகள் ஓர் ஒழுங்குமுறைக்குட்பட்ட வரையறைக்குள் சமூகச் செயலாற்றியதைச் சங்கப் பாடல்கள் தெளிவுறுத்துகின்றன. குறுந்தொகையின் பாலைத்திணைப் பாடல்கள் தெளிவுறுத்தும் சமூகவியல் பண்புகள், அதன்வழி பெறப்படும் சங்ககால வாழ்வியல் சிறப்புகள், தமிழர் வாழ்வின் தனித்தன்மை ஆகியனவற்றைக் கண்டறிதல் இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றன.

சங்க காலத்தில் திணைநிலைச் சமூகம் நிலைபெற்றிருந்தது. காடுகள், மலைகள், கழனிகள், கடற்கரைப் பகுதிகள் மக்கள் வாழிடங்களாக இருந்தன. இந்த நானிலத்திலும் வாழ்ந்த மக்கட் சமூகத்தில் பண்பாட்டு அடிப்படையிலான ஒற்றுமைக்கூறுகளும் நிலவியல் சார்ந்த சிறப்புக்கூறுகளும் நிலைபெற்றிருந்தன. குறுந்தொகையின் திணைநிலைப் பாடல்கள் அவ்வத்திணையின்

இயற்கை இயங்கியலோடு பொருந்த வருமாறு படைப்பாக்கம் செய்யப்பட்டுள்ளன.

## சங்க இலக்கியத்தில் பாலை

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நான்கு நிலங்களின் செய்யுள்கள் அவற்றுக்குரிய நிலங்களிலேயே வளர்ச்சி பெற்றனவாகும். மேலும் அத்திணைப் பாடல்கள் அந்நான்கு நிலங்களிலும் வாழும் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளாலும் பழக்க வழக்கங்களாலும் உருப்பெற்றவையாகும். சங்ககாலத்தில் பாலை நிலம் மக்கள் வாழ்ந்த நிலையான இடம் அன்று. சங்கப் பாடல்களில் பொருளீட்டுவதற்குப் பிரிந்து செல்லும் ஒரு நிலவழியாகவே கருதப்பட்டது. இதனைத் தமிழண்ணல், "பாலைத்திணைப் பாடல்கள் பாலை நில மக்களின் வாழ்க்கைப் படைப்போ, பாலைநில நாட்டுப்புறப் பாடல்களிலிருந்து விரிவுபடுத்தப் பட்டனவோ அல்ல. அவை ஏனைய நான்கு நிலத்தலைவர்களின் பிரிவு குறித்த பாடல்களாகும். பிற நான்கு நில மக்களுக்கும் பொதுவாக உள்ளமையால் பாலைப் பாடல்களின் எண்ணிக்கையும் மிகுதியாக உள்ளது" (225:2011) என்று விளக்கம் தருகின்றார்.

நானிலத்திற்குரிய ஒழுக்கவியற் பண்புகளில் பாலை நிலத்திற்குரிய 'பிரிதலும் பிரிதல் நிமித்தமும்' சமூகவியல் நோக்கில் மிக முக்கியப் பங்காற்றுகின்றது. ஏனைய திணைகளைவிடப் பாலைத் திணைப் பாடல்கள் சங்கச் சமூகத்தின் நிலைப்பாட்டினை அறிந்து கொள்ளப் போதுமானவையாக அமைந்துள்ளன.

## சமுதாயம்

இலக்கியமும் சமுதாயமும் பின்னிப் பிணைந்தவை ஆகும். இலக்கியத்தைச் சமுதாயமும் சமுதாயத்தை இலக்கியமும் காட்சிப்படுத்துகின்றன. படைப்பாளர்கள் சமூக வழக்காறுகளைக் கண்டும் கேட்டும் உணர்ந்தும் அறிந்தும் பெற்றவற்றைக் கலையாக்கித் தருகின்றனர். அவ்வகையில் சங்கச் சமூகத்தை அறிவதற்குச் சங்கப் பாடல்களே பெருந்துணை புரியும் திறன் தெளிவாகும்.

தொல் பழங்காலத்திலிருந்து இன்று வரை நிகழ்ந்துவரும் பண்பாட்டு வளர்ச்சி, அவற்றுக்கான காரணங்கள், அவற்றின் விளைவுகள் ஆகிய எல்லாவற்றையும் ஆய்ந்து கூறும் ஓர் அறிவியல் துறையாகச் சமூகவியல் திகழ்கின்றது.

"சமூகம் என்பது ஒரு வரையறுத்த தொடர்ச்சியான வாழ்க்கை முறை அல்லது பண்பாட்டைப் பெற்ற, தமக்குள்

ஒற்றுமையுடையவராக வாழும் மக்களைக் கொண்டது" என்கிறார் டேவிட் டிரஸ்ஸலர். ஆதலால் சமூகவியல் என்பது மக்களின் வரலாற்றையும் பண்பாட்டு வரலாற்றையும் ஒன்றிணைத்ததாக அமைந்துள்ளமை புலனாகும்.

"இலக்கியம், சமூகக் காரணங்களின் விளைவு மட்டும் அல்ல; சமூக விளைவுகளின் காரணமும் ஆகும்" என்று இலக்கிய உருவாக்க நிலைப்பாட்டினைச் சிறப்பித்துரைப்பர். எல்லாக் காலத்து இலக்கியங்களும் சமூகத்துடன் இணைந்து செயலாற்றி, அவ்வக்காலச் சமுதாய மக்களின் வாழ்க்கையைப் பிரதிபலிக்கின்றன.

சமூகம், சமுதாயம் என்பன society என்ற ஆங்கிலச் சொல்லின் விளக்கங்களாக அமைந்துள்ளன. இவ்விரு சொற்களும் மக்களின் கூட்டமைப்பு, மக்கள்திரள் என்ற பொருளைத் தருகின்றன.

இவ்விரண்டிற்கும் நுண்ணிய வேறுபாடுகள் பொருளடிப்படையில் இருப்பினும் சமூகம் என்ற சொல் ஒருங்கிணைந்த மக்கள் கூட்டம், ஒரு மனப்போக்குடைய மக்கள் குழு என்ற கருத்தினைத் தருவதாகவும் சமுதாயம் என்ற சொல் திரள், அதிகாரிகளின் கூட்டம், ஊர்ப்பொதுச்சொத்து, உடன்படிக்கை ஆகிய பொருள்களில் பொருள் தருவதாகவும் கு.வெ.பாலசுப்பிரமணியன் தனது 'சங்க இலக்கியத்தில் சமூக அமைப்புகள்' என்ற நூலின்வழி தெளிவுறுத்துகின்றார்.

## சமூகவியலும் குடும்பமும்

தனிமனித வாழ்வு சமூகத்தோடு இணைவதற்குக் குடும்ப வாழ்வு மிக முக்கியப் பங்காற்றுகின்றது. குடும்பத்தின்வழி ஏற்படுத்திக் கொள்ளும் உறவுகள் மனித சமூகத்தை இணைக்கும் பாலமாகச் செயல்படுகின்றன. இதை மனிதனுடைய சமூக இயல்பு (Sociability) என்பர் சமூகவியலாளர். தனிமனிதன் அரசு, ஊர், தெரு, சாதி, குலம், பால், தொழில் என்பன போன்றவற்றுள் ஏதாவது ஒன்றினால் சமூக அமைப்பில் பிணைக்கப் படுகின்றான். "மனிதனை அவனுடைய தனித்த நிலையிலிருந்து சமூக உறுப்பினனாக மாற்றும் பிணைப்புகளில் குடும்பமும் உறவுமுறைகளுமே தலைமை பெறுகின்றன" என்கிறார் கு.வெ.பாலசுப்பிரமணியன் (19:1994). இதனால் தனி மனிதன் சமூகத்தோடு ஏற்படுத்திக் கொள்ளும் உறவுகளில் குடும்ப உறவே முக்கியமானதாக அமைகிறது. மனிதனது உடலியல், உணவுத்தேவை, வாழ்க்கைப் பிடிப்பு ஆகியவற்றின் தேவைகளை உறவுகளே நிலைநிறுத்துகின்றன. இதன்பொருட்டே சங்க அகப்பாடல்கள் இல்லற வாழ்க்கையின்

சமூகவியற் பண்புகளைப் பல்வேறு நிலைகளில் அலசுகின்றன.

குடும்ப வாழ்வு நிலைபெற்றுத் திகழ்வதற்கு கணவன்–மனைவி இருவருக்கு இடையே புரிந்துகொள்ளும் தன்மையும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கும் பாங்கும், ஒருவர் மீது மற்றவர் வைத்திருக்கும் நம்பிக்கையும் முதன்மையானவையாக அமைகின்றன. இத்தகு குடும்ப வாழ்வின் சிறப்பு பாலைத் திணைப் பாடல்களில் வெகுவாகக் காட்டப்படுகின்றது.

“சங்க காலச் சமூக மதிப்புகளில் உயர்ந்த வாழ்க்கைக் கோட்பாடுகள் அனைத்தையும் உள்ளடக்கிய அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றையும் ஒப்புரவு, வாய்மை, மானம், பெருமை, குடிமை, ஈகை, விருந்தோம்பல் ஆகிய எல்லாவற்றையும் குறிக்கலாம்.

இம்மதிப்புகளைப் புலப்படுத்தும் அமைப்புகளாகக் குடும்பம், அரசு, சான்றோர் கூட்டம் ஆகியன இருந்தன” **(111:1994)** என்கிறார் கு.வெ.பாலசுப்பிரமணியன்.

பொருள் தேடும் பொருட்டுத் தலைவியைப் பிரியக் கருதிய தலைவன், தனக்கு இன்பம் தரும் பொருள் தலைவியே



அன்றி வேறு யார் உளர்? எனக் கருதி, தன் பிரிவினைத் தவிர்த்த நிகழ்வினை,

**“மருந்து எனின் மருந்தே; வைப்பு எனின் வைப்பே**
**அரும்பிய சுணங்கின் அம்பகட்டு இளமுலை**
**பெருந்தோள் நுணுகிய நுசுப்பின்**
**கல்கெழு கானவர் நல்குறு மகளே”**

**– (குறு. பா. 71)**

என்னும் பாடல் உணர்த்தி நிற்கக் காணலாம். தன்னுடைய பிணியை நீங்கச் செய்யும் அருமருந்தாகவும் வறுமையை நீக்கும் செல்வமாகவும் தலைவியே திகழ்கின்றாள் என்பதனை இப்பாடல் காட்டக் காணலாம்.

■ தொடரும்...

கவிஞர் தேவி இராமசாமி
மலேசியா

# நிலைக் கண்ணாடி...

வட்டப்பொட்டும்
வடிவாய் இட்டதினால்
எழில் வண்ணம்
கூட்டும் உந்தன் முகந்தனிலே...

மையுண்ட கருவிழியை
கண்டதினால்
மையலுரும் காண்பவர்
மனதினிலே...
ஆடை அணிகலன்கள்
உடுத்திட
தெரிந்துவிடும் குறைதனைத் திருத்திட
பிரதிபிம்பம்தான் தெரிந்திடுமே கண்முன்னாடி...

அலங்காரம்
முகத்தின் அழகைக் கூட்டும்...
அப்படியே அகத்தின்
மனோபாவம்
உணர்த்திடுமே
அதிசயம்தான்
கண்ணாடி...

உள்ளபடி உருவம் காட்டும் கள்ளமில்லா காட்சி...
வெள்ளை மனதின்
விளம்பிடும் மாட்சி...

இணையில்லா
இரசவாதத்தின்
அருமையான சாட்சிதான்
நிலைக் கண்ணாடி..!

# மணிமேகலை உ.வே.சா.பதிப்பு

பகுதி–I

முனைவர் **கதி.முருகேசன் (கதிர்முருகு)**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
கணேசர் கலை அறிவியல் கல்லூரி, மேலைச்சிவபுரி,




### ஆய்வுச் சுருக்கம்

களப்பிரர் காலத்தில் படைக்கப்பட்ட வளமான காப்பியங்களுள் ஒன்று மணிமேகலை. பௌத்த சமயக்கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு படைக்கப்பட்ட இந்நூல் உ.வே.சாமிநாதையர் பதிப்பாக 1898ஆம் ஆண்டு வெளிவந்தது. மணிமேகலைக் காப்பியத்தின் மூலப்பிரதிகள் பலவற்றையும் ஒப்புநோக்கித் தமிழ் மொழியின் சிறப்புக்கு மேலும் சிறப்புச் சேர்க்கும் வண்ணம் அரிதான பல செய்திகளுடன் பதிப்பிக்கப்பட்டது. தகவல் தொடர்பும் அறிவியல் வளர்ச்சியும் குறைந்த அளவில் இருந்த காலத்தில் அரிதின் முயன்று வெளியிடப்பட்ட மணிமேகலைப் பதிப்பு உ.வே.சாவின் பதிப்புத்திறனுக்குத் தக்கதொரு சான்றாகும்.


### மணிமேகலை உ.வே.சா. பதிப்பு

மணிமேகலை ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று. பௌத்த சமயம் சார்ந்தது. மணிமேகலைக் காப்பியத்தின் பதிப்புப்பணி நடைபெற்ற முறைமையினையும் அதற்காகத் தான் எடுத்துக்கொண்ட முயற்சிகளையும் பொருள் புரிதலில் இருந்த இடர்களையும் உ.வே.சா விரிவான அளவில் பதிப்புரையில் பதிவு செய்திருக்கிறார். முதல் பதிப்பெனினும் அரிய பதிப்பெனக் கருதத்தக்க அளவில் அமைந்திருக்கிறது.

### பதிப்பு முயற்சி

ஏடுகளில் புதைந்து கிடக்கும் நூல்களைப் பதிப்பித்து வெளியிடுதல் அரிதான நிகழ்வாகும். தன்னலம் கருதாத தகைமையாளர்கள் இல்லை எனில் இத்தகைய முயற்சிகள் கைகூடி இருத்தல் இயலாது. சி.வை. தாமோதரம் பிள்ளை, உ.வே.சாமிநாதையர், திருமாளிகை சௌரிப்பெருமாள் அரங்கன் முதலான சான்றோர்கள் இத்தகைய பணிகளைத் தன்னலம் இன்றிச் செய்த காரணத்தால் இன்றைக்குத் தமிழ் செம்மொழி என்னும் உயரிய பேற்றைப் பெற்று விளங்குகிறது. “யானை வேட்டுவன் யானையும் பெறுமே” என்னும் புறநானூற்றுப் புலவன் கோப்பெருஞ்சோழனின் முயற்சி கூறும் செய்யுளுக்குச் சிறந்த சான்றாகக் கொள்ளத்தக்க பெருமை உடையவர் உ.வே.சா. “பிழைகளைப் பிழைகளென்று நிச்சயித்துக் களைந்து திருத்தமான பாடங்களைத் தெரிந்து

கொள்ளுதற்கு எடுத்துக்கொண்ட முயற்சியும் கழிந்த காலமும் அடைந்த வருத்தமும் அளவுபடுவன அல்ல" என்று 2008ஆம் ஆண்டுப் பதிப்பில் ம. வே. பசுபதி உ. வே. சாவின் கூற்றை எடுத்துக்காட்டுவது பதிப்பு முயற்சி எத்தனை கடுமையானது என்பதை உணர்த்தும் சான்றாகும். உ.வே.சா மணிமேகலைப் பதிப்புக்காக எடுத்துக்கொண்ட முயற்சிகள் இன்றைய பதிப்பாளர்களுக்கும் ஆய்வாளர் களுக்கும் வழிகாட்டும் சிறப்பினவாகும்.

## மணிமேகலைப் பிரதிகள்

உ.வே.சா. மணிமேகலைக் காப்பியத்தைப் பதிப்பிப்பதற்காகப் பல்வேறு சுவடிகளை எடுத்துக்கொண்டிருக்கிறார். மணிமேகலைக் காப்பியத்தின் முதல் பதிப்பு 1898ஆம் ஆண்டும் இரண்டாம் பதிப்பு 1921ஆம் ஆண்டும் வெளிவந்தன. அவற்றுள் முதல் பதிப்புக்கு உதவிய பிரதிகளைப் பின்வருமாறு முறைப்படுத்தியுள்ளார்.

1. திருவாவடுதுறை ஆதீனத்துப்பிரதி – 1
2. எட்டயபுரம் பெரிய அரண்மனைப்பிரதி – 1
3. மிதிலைப்பட்டி ஸ்ரீ அழகிய சிற்றம்பலக் கவிராயரவர்கள் வீட்டுப் பிரதி – 1
4. திருநெல்வேலி ஸ்ரீ திருவம்பலத்தின்னமுதம் பிள்ளையவர்கள் பிரதி – 1
5. சேலம் ஸ்ரீ இராமசாமி முதலியாரவர்கள் பிரதி – 1
6. யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீ சிற்கைலாசப் பிள்ளையவர்கள் பிரதி – 1
7. ஆறுமுகமங்கலம் ஸ்ரீ சுந்தரமூர்த்திப் பிள்ளையவர்கள் பிரதி – 1
8. திருமயிலை ஸ்ரீ சண்முகம்பிள்ளை அவர்கள் பிரதி – 1
9. சென்னை ஸ்ரீ தி. முத்துக்குமாரசாமி முதலியாரவர்கள் பிரதி – 1
10. சென்னை இராசாங்கத்துக் கையெழுத்துப் புத்தகாலையப் பிரதி – 1

மேற்கண்ட பத்துப் பிரதிகளில் மணிமேகலையைச் செப்பமாகப் பதிப்பித்து வெளியிடுவதற்குத் துணைநின்றதாக உ. வே.சா மிதிலைப்பட்டிப் பிரதியைக் குறிப்பிடுகிறார். "மிகப் பழமையானதும் பரிசோதனைக்கு இன்றியமையாததாக இருந்ததும் மற்றைப் பிரதிகளிற் குறைந்தும் பிறழ்ந்தும் திரிந்தும் போகிய பாகங்களையெல்லாம் ஒழுங்குபடச் செய்ததும் கோப்புச் சிதைந்து அழகுகெட்டு மாசு பொதிந்து கிடந்த செந்தமிழ்ச் செல்வியின் மணிமேகலையை அவளணிந்து கொள்ளும் வண்ணம் செப்பம் செய்து கொடுத்ததும் மிதிலைப்பட்டி பிரதியே."

## உரை தேடல்

உ.வே.சாவிற்குக் கிடைத்த மூலப் பிரதிகள் நூலைப்பதிப்பித்து வெளியிடுவதற்குப் போதுமானதாக அமையவில்லை என்பதால் மணிமேகலை உரையைத் தேடும் முயற்சியில் மனம் தளராமல் ஈடுபட்டார். "பல வருடங்களுக்கு முன் பழைய தமிழ்ப் புத்தகங்களைத் தேடும் வண்ணம் இத்தமிழ்நாட்டிலுள்ளே செல்வதற்

உரிய பல ஊர்களுக்குச் சென்று அங்குள்ள பரம்பரைத் தமிழ்ப் பண்டிதர்களுடைய வீடு களில் இருந்த கையெழுத்துப் பிரதிகளைப் பரிசோதித்துப் பார்த்த காலங்களிலெல்லாம் எனக்கு மணிமேகலை மூலப்பிரதிகள் மட்டும் கிடைத்தனவேயன்றி உரைப்பிரதி யாண்டும் கிடைத்திலது. சென்னை, தஞ்சை முதலிய நகரங்களிலுள்ள பழைய கையெழுத்துப் புத்தக சாலைகளும் பார்க்கப்பட்டன. அங்கும் கிடைக்கவில்லை. வெளிநாட்டிலுள்ள நண்பர்கள் பலரைப் பத்திரிகை வாயிலாக இதைப்பற்றி வினவினேன், அங்ஙனம் வினாவப்பட்டவர்களுள் யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீ. சிற். கைலாசப் பிள்ளையவர்கள் தமது கையாலெழுதிய மூலப் பிரதியொன்றை அன்புடன் அனுப்பினார்கள். பின்பு பாரிஸ் நகரத்துள்ள புரொபஸர் ஜூலியன் வின்ஸன் என்பவர் "இந்நகரத்துக் கையெழுத்துப் புத்தக சாலையில் மணிமேகலை மூலப்பிரதி ஒன்றேயுள்ளது என்று தெரிவித்து மாதிரிகைக்காக அதிலிருந்து பதிகத்தை மட்டும் எழுதியனுப்பினார்; மற்றவர்கள் யாதொன்றுங் கிடைக்கவில்லை என்று விடையளித்துவிட்டார்கள்"

### சமய நூல்

மணிமேகலை பௌத்த சமயக் காப்பியம். சமயக் கருத்துகள் நூலெங்கிலும் விரவியுள்ள காரணத்தால் செய்யுளின் பொருள் உணர்ந்து அதற்கு உரை எழுதவும் சமயக் கருத்துகளை விரித்துரைக்கவும் அருமைத் தன்மை நிலவியதனை மனத்தில்கொண்டு மூலப் பிரதியை மட்டும் பதிப்பிக்க உ.வே.சா. எண்ணம் கொண்டார். ஆனால் தமிழறிஞர்கள் பலரும் உ.வே.சா.மணிமேகலைக்கு உரையெழுதி வெளியிட வேண்டும் என்னும் தம் ஆவலை வெளிப்படுத்தினர். உ.வே.சா. மணிமேகலை யில் இடம்பெற்றுள்ள சமயச் சிந்தனைகளை விரித்துரைக்க திருஞான சம்பந்தர் தேவாரத்தில் இடம்பெற்றுள்ள பௌத்த சமயக் கருத்துகள் சிவஞான சித்தியார் பரபக்கத்துள்ள சௌந்திராந்திகன்மத முதலியனவும் அவற்றிற்கு திருவொற்றியூர் ஞானப்பிரகாசர் எழுதிய உரையும் உரையில் இடம்பெற்றுள்ள உதாரணச் செய்யுள்களும் அவற்றுக்கான மறுப்புகளும் நீலகேசியும் அதன் உரையும் மேற்கோள் செய்யுள்களும் வீரசோழியம் உரையில் உள்ள சில உதாரணச் செய்யுள்களும் உதவியாக அமைந்தன. சமயக் கருத்துகளைத் தெளிவுற அறிந்துகொள்ளும் வண்ணம் வெளியூர்களுக்குக் கடிதம் எழுதித் தாம் அறிந்தவர்களிடம் விளக்கங்களைக் கேட்டுப் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டார். பௌத்த சமயக் கொள்கைகள் மற்றும் மணிமேகலை நூலில் இடம்பெற்றிருக்கும் சமயக் கருத்துகளைப் புரிந்துகொள்வதற்கு அருமைத் தன்மை உடையதாக இருந்த காரணத்தால் உ.வே.சா. பௌத்த சமயக் கருத்துகளையும் சமயச் சிந்தனைகளையும்

அறிந்த அறிஞர்களைக் கண்டு தெளிவுபடுத்திக் கொண்டார். அவ்வகையில் குறிப்பிடத்தக்கவர்கள் ஸ்ரீ அரங் காச்சாரியார், ஸ்ரீ ஸுமங்களர் ஆகியோராவர். வடமொழிச் சொற்களின் பொருளைத் தெளிவாக எடுத்துக் கூறியவர்களுள் குறிப்பிடத்தக்கவர் ஸ்ரீ ஸ்ரீனிவாஸாச்சாரியாரவர்கள் என்று உ.வே.சா. பதிப்புரையில் தெளிவுபடுத்தி யுள்ளார். “ஹிந்து தேசத்து வித்தைகளிலும் ஆங்கிலேயவித்தை களிலும் மிகப்பயிற்சியடைந்து விளங்கிவரும் சென்னை இராசதானிக் கலாசாலையில் ஸம்ஸ்கிருதப் போதகா சிரியருமாக இருந்தவரான இராவ்பகதூர் மனூர் ஸ்ரீ அரங்காச்சாரியாரவர்கள் எம். ஏ., பௌத்த சமய நூல்களிலும் பாண்டித்திய முள்ளவர்கள் என்பதை அறிந்துகொண்டு உரியகாலங்களில் அவர்களிடத்துச் சென்று வினாவி வந்தேன்; வருகையில் ஒவ்வோரமயத்தும் தடையின்றி உடனுடன் அவர்கள் கூறிய விடைகளால் அறிதற்கு முன்பு எனக்கிருந்த ஐயங்களிற் பெரும்பாலான நீங்கின; நீங்கவே இந்நூலைப் பரிசோதித்தலில் என்மனம் ஊக்கம் பெற்றது. இவர்களுடைய பேருதவி இல்லையாயின் மணிமேகலையில் வந்துள்ள துடிதலோகம், பராமிதை, அரூபப்பிரமர், உரூபப்பிரமர் முதலிய சொற்களுக்குக்கூட உள்ளவாறே பொருள் கொள்ளுதல் எனக்கு அரிதாகும்” மணிமேகலை முழுமையும் சமயக் கருத்துகளின் வழியாக உய்த்துணர்ந்த உ.வே.சா. நூலின் பொருளைப் பின்வருமாறு குறிப்பிடுகிறார். “ஒருவன் மனமொழி மெய்கள் தூயனாகி எல்லா உயிர்களிடத்தும் எப்பொழுதும் அருளுடையனாதல் வேண்டுமென்பதே”

### முகப்புப் பக்கம்

மணிமேகலை 1898ஆம் ஆண்டு வெளியான முதல் பதிப்பின் முகப்புப் பக்கம் பின்வருமாறு அமைந்திருக்கிறது.

உ

கணபதி துணை

கடைச்சங்கத்துப் புலவர்களுள் ஒருவராகிய

மதுரைக்

கூலவாணிகன் சாத்தனார்

அருளிச்செய்த

மணிமேகலை மூலமும்

கும்பகோணம் கவர்மெண்ட் காலேஜ்

தமிழ்ப்பண்டிதராகிய உத்தமதானபுரம் வே.

சாமிநாதையரெழுதிய

அரும்பதவுரையும்

=

இவை

பாலவனத்தம் ஜமீன்தாரவர்களாகிய

இராமநாதபுரம்

ம—ள—ள—ஸ்ரீ

பாண்டித்துரைத் தேவரவர்கள்

உதவியைக் கொண்டு

ஷ சாமிநாதையரால்

சென்னை

வெ. நா. ஜூபிலி அச்சுக் கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டன

1898

■ தொடரும்...

# துளிர்க்கும் சருகுகள்...

அமைதியே
மனிதன்
அடையும்
பெரும் பாக்கியம்
–செயிண்ட் அகஸ்தீன்

எந்த விபத்தும்
விபத்தன்று.
அதைப் பொறுக்கும்
ஆற்றலுடைமையே
பாக்கியம்
– மார்கஸ் ஔரேலியஸ்

அமைதி
மதிப்புயர்ந்த
நகை
– எம்.ஹென்றி

மன அமைதியோடு
இருப்பவனுக்கு
என்றுமே
ஆபத்து இல்லை
–லா வோட் ஸே

அதிகம்
எதிர்பார்ப்பதைவிட
கிடைத்துள்ள
சிறிதைக் கொண்டு
திருப்தி அடை
– தாமஸ்
அ.கெம்பிஸ்

## மன அமைதி...

மனோன்மணியம் சுந்தரனாரின் பார்வையில்

# பத்துப்பாட்டு பாடல்களின் தொன்மையும், இலக்கிய நயமும்



முனைவர் **சு.மோதிலால் நேரு***
திருவனந்தபுரம்

**நக்கீரர் காலம் குறித்து சுந்தரனார்**

நான்காவதாக சைவ சமயக் குரவர்களில் ஒருவரான சுந்தரர் சம்பந்தரின் காலத்திற்குப் பிறகு வாழ்ந்தவர் என்றாலும், இவர்களின் கால இடைவெளி அந்த அளவுக்கு நீண்டது அல்ல. சுந்தரர் எழுதிய திருத்தொண்டத் தொகையிலும் நம்பியாண்டார் நம்பியின் அந்தாதியிலும் அவருக்கு முன்பு வரை வாழ்ந்த தொண்டர்களைக் குறித்துப் பாடும்பொழுது நக்கீரரையும் முக்கியமாகக் குறிப்பிட்டுப் பாடுகிறார்கள்.

நச்சினார்க்கினியர் என்ற சைவ சமயப் பெரியவரும் அறிஞருமான இவர், அவரது உரையில் சம்பந்தரின் பாடலின் ஒரு வரியைக் கூட எங்குமே கூறவில்லை. ஆனால், மாணிக்கவாசகரின் பாடல் வரிகளைத் தகுந்த இடங்களில் மேற்கோள் காட்டிக் கூறுகிறார். இவரும் மதுரை தமிழ்ச் சங்க காலத்திற்குப்பின் வாழ்ந்தவர் என்றாலும் இதிலிருந்து ஒன்று மட்டும் தெளிவாகிறது. அதாவது சம்பந்தரின் பாடல்களோ, வார்த்தைகளோ, மாணிக்கவாசகரது கூற்றைப் போல் பழமையானதாகவோ போற்றுதற்குரியதாகவோ கருதப்படவில்லை.

நச்சினார்க்கினியர் ‘உச்சிமேல் புலவர் கொள் நச்சினார்க்கினியர்’ என்று போற்றப்படும் இவர் சிறந்த உரையாசிரியர். இவர் தொல்காப்பியம், பத்துப்பாட்டு, கலித்தொகை, சிந்தாமணி ஆகிய நூல்களுக்கு உரை கண்டுள்ளார். சிறந்த உரை எழுதியதுடன் மூல நூல்களையும் காத்த பெருமை இவருக்கு உண்டு. இவர் வடமொழியிலும் தேர்ச்சி பெற்றவர்.

இறுதியாக மதுரை தலபுராண[2] நூல் ஒரு முழுமையான சரித்திர நூல் அல்ல என்றாலும் அது கற்பனையில் மட்டுமே உருவான கதைகளோ, சம்பவங்களோ அல்ல. இந்த நூல் ‘வம்ச சேகர’ என்ற பாண்டிய மன்னனுக்கும் அதாவது சம்பந்தரால் சமண மதத்திலிருந்து சைவ சமயத்துக்கு மீட்டுக் கொண்டு வரப்பட்ட

[2] Taylor's Historical Manuscripts Vol -1 P-23

கூன்பாண்டியன் என்ற மன்னனுக்கும் இடையில் 26 பாண்டிய மன்னர்கள் ஆட்சி செய்ததாகக் கூறுகிறது. இந்தச் செய்தியின் அடிப்படையில், ஒவ்வொரு மன்னரும் குறைந்தது பதினைந்து ஆண்டு காலம் ஆட்சி செய்து இருப்பார்கள் என்று கணக்கிட்டால் குறைந்தது நான்கு நூற்றாண்டு இடைவெளி இருந்தது என்று கருதலாம்.

மேற்கூறிய காரணங்களின் அடிப்படையில் எந்தவிதத் தயக்கமுமின்றி நக்கீரர், சம்பந்தரின் காலத்திற்கு முன்பாக வாழ்ந்திருந்தார் என்றும் இந்த இருவருக்கும் இடையிலான கால இடைவெளி மூன்று அல்லது நான்கு நூற்றாண்டுகள் இருக்கும் என்றும் கூறுவது தவறல்ல. சம்பந்தரின் காலத்தை உறுதி செய்துவிட்டால் அதன் அடிப்படையில் நக்கீரரின் காலத்தை உறுதி செய்து கொள்ளலாம்.

## ஆதிசங்கரர் காலம் குறித்து சமஸ்கிருத வல்லுநர்கள்

சமஸ்கிருதப்பண்டிதர்கள் ஆதிசங்கரரின் காலத்தை எட்டாம் நூற்றாண்டு என்று ஒப்புக்கொள்கிறார்கள். ஆதிசங்கரர், தனது சௌந்தர்ய லஹரியில் சம்பந்தரைப் போற்றும் விதமாக ‘திராவிட சிசு’ என்று கூறுகிறார். இது ஆதிசங்கரரின் காலத்திற்கு முன்பே சம்பந்தர் ஒரு போற்றப்படும் ஞானியாக இருந்தார் என்பதை மட்டுமல்ல, கால இடைவெளியின் காரணமாக சம்பந்தரை இறைவனுக்கு நிகராகக் காணும் அளவிற்குப் போற்றப்படும் நிலைக்கு அவர் உயர்ந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

ஆதிசங்கரரைப் போன்ற ஞானிகளே சம்பந்தரை இறைவனுக்கு நிகராகப் போற்றும் அளவுக்குச் சிறப்புநிலை அடைவதற்கு நிச்சயமாக இவர்களின் கால இடைவெளி குறைந்தது இரண்டு அல்லது மூன்று நூற்றாண்டுகளாவது இருக்க வேண்டும். இதற்கும் மேல், சங்கரரது இறைக்கொள்கை சம்பந்தரின் கொள்கையில் இருந்து மாறுபட்டதாக இருந்தது என்பது மட்டுமல்ல, இவர் தமிழுக்கு அன்னியரும் கூட, வட இந்தியாவில் சங்கரர் ஒரு புகழ்பெற்ற ஞானி, இவரது படைப்புகள் அனைத்துமே சமஸ்கிருதத்தில் வெளிவந்தன.

## ஆதிசங்கரர் காலம்–நீதிபதி டிலாங் மற்றும் ஜே.எப்.ப்ளீட்

சௌந்தரிய லஹரி ஆதிசங்கரரின் படைப்பு என்பதை ஒப்புக் கொள்வதாக இருந்தால், நிச்சயமாக நமக்குச் சம்பந்தரின் காலம் ஆதிசங்கரரின் காலத்திற்கு முற்பட்டது என்று கூறுவதில் எந்தத் தடையும் இல்லை. மதிப்பிற்குரிய நீதிபதி டிலாங் (Telang)[3]

[3] Telank K.T. (1884) Date of Sankaracharys Indian AntiQuary Vol 13 page 95

சம்பந்தரின் காலம் ஆறாம் நூற்றாண்டு என்று கூறுவதற்குப் பல காரணங்களைக் கூறுகிறார்.

பொதுவாக ஆராய்ச்சியாளர்கள் (J.F.Fleet)[4] கூறுவதைப் போல் தற்சமயம் நமது ஆராய்ச்சியில் சங்கரரின் காலம் எட்டாம் நூற்றாண்டு என்று கருதினால், இரண்டு நூற்றாண்டு இடைவெளியை அடிப்படையாகக் கொண்டு, நமக்குச் சம்பந்தரின் காலம் ஆறாம் நூற்றாண்டு என்று கருதலாம். சம்பந்தர் மிகப் பழமையான காலத்தைச் சார்ந்தவர் என்று கூறி மிகைப்படுத்த விரும்பவில்லை, ஆனால் இந்தக் கணிப்பில் ஏதாவது தவறு என்றால் அந்தத் தவறு இதனுடன் சேர்ந்து கணக்கிடப்படும் விஷயத்திற்கும் பொருந்தும்.

### மதுரை சம்பந்தர் மடமும் காலமும்


மூன்றாவதாக எந்தச் சந்தேகத்திற்கும் இடமில்லாமல் சம்பந்தரின் காலத்தை உறுதி செய்ய இது போதுமானது, தற்போதைய மதுரை சம்பந்தர் மடத்தின் தலைவர் 114ஆவது வாரிசு. இந்த வாரிசு[5] தொடர்ச்சிக் கணக்கு உண்மையானால் சம்பந்தரின் காலம் ஐந்தாம் நூற்றாண்டு என்று கூறலாம், அதாவது இந்த மடத்தின் தலைவர்கள் சராசரியாக 12 ஆண்டுகள் இந்தப் பதவியில் இருந்தார்கள் என்ற கணக்கின் அடிப்படையில் சம்பந்தர் காலம் ஐந்தாம் நூற்றாண்டு என்று கூறலாம்.

இதனடிப்படையில் சம்பந்தர் ஐந்தாம் நூற்றாண்டு காலத்தில் வாழ்ந்தார் என்று கூறுவதில் எந்தத் தவறும் இல்லை. நமக்கு முன் இருக்கும் ஆதாரங்களின் அடிப்படையில் சம்பந்தர் ஏழாம் நூற்றாண்டுக்குப் பிறகு வாழ்ந்திருக்க முடியாது. எனவே இவரது காலத்தின் இரு வரம்புகளாக ஐந்தாம் நூற்றாண்டை முற்பட்ட கால எல்லையாகவும் ஏழாம் நூற்றாண்டை பிற்பட்ட கால எல்லையாகவும் கருதலாம். முன்னதாகக் கூறியதைப்போல் சம்பந்தர் காலத்திற்கு இரண்டு அல்லது மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பு நக்கீரர் வாழ்ந்திருக்க வேண்டும்.

தொடரும்...

[4] Fleet J.F (1887) A note on the Date of Samkaracharya Indian Antiquary Vol-X VI, P-41

[5] தாமோதரன் பிள்ளை வீரசோழியம் பக்கம் 17இல் கல்வெட்டு ஆராய்ச்சியாளர் நெல்சனின் மதுரையில் அமைந்துள்ள சம்பந்தர் மடத்தின் இன்றைய தலைவர் 277ஆவது தலைமுறையைச் சார்ந்தவர் என்று கூறுகிறார். இந்த மடத்தின் பதிவேடுகள் முழுமையாக பாதுகாக்கப்படாததே வேறுபட்ட கருத்துக்குக் காரணம். பேராசிரியர் சுந்தரம் பிள்ளை தனது தொடர்ந்து ஆராய்ச்சியின் மூலம் திருஞானசம்பந்தரின் காலம் கி.பி.ஏழாம் நூற்றாண்டின் ஆரம்பகாலம் என்று தனது சம்பந்தர் கால ஆராய்ச்சி என்ற நூலில் கூறுகிறார். அதுமட்டுமல்ல வி.வெங்கையா இந்த நூலுக்கு எழுதிய முகவுரையில் வாதாபி நகரம் அழிந்தது. ஏறத்தாழ கி.பி.642ஆம் வருடம் எனவே சம்மந்தரின் காலம் ஏழாம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலம் என்று கூறுகிறார். (Tamilian Antiquary, No.3–காண்க)



# சித்திரம் பேசுதடி..!

**மல்லப்பாடி – தொன்மையான பாறை ஓவியங்கள் உள்ள இடம்.**
**விழுப்புரத்தின் அருகில் உள்ள ஊர் பனைமலை**

காலத்தை வென்றுநிற்கும் மல்லப் பாடி
    கற்பாறை குகையொளிரும் சித்தி ரங்கள்
ஞாலத்தின் மூத்தகுடி தமிழர் என்னும்
    ஞாயத்தைப் பேசுகின்ற ஆவ ணங்கள்
கோலத்தைக் கண்டின்றும் வியந்து போகக்
    கொலுவிருக்கும் பல்லவர்தம் மாமண் டூரும்
சீலமுடன் மாமல்ல புரத்தி ருக்கும்
    சித்திரமும் தமிழ்க்கலையின் பெருமை பேசும்!

பனைமலையின் கோவில்தம் சுவரில் காணும்
    பசும்வண்ணக் கந்தர்வர் சித்தி ரங்கள்
வனைந்திருக்கும் காஞ்சிக்கை லாச நாதர்
    வாழ்கோயில் சோமாசின் சித்தி ரங்கள்
நினைவிருந்தே அகலாமல் கண்ணுக் குள்ளே
    நிற்குதஞ்சை பெருங்கோயில் சித்தி ரங்கள்
புனைந்திருக்கும் மதுரைமீ னாட்சி கோயில்
    புகழோவி யங்கள்நம் கலையைப் பேசும்!

சித்தன்ன வாசல்தம் சித்தி ரங்கள்
    சித்தத்தை மயக்குகின்ற அற்பு தங்கள்
வித்தையினைக் குளமாக்கி எருமை யானை
    விளையாட அன்னங்கள் பறந்து செல்லச்
சத்தத்தைக் கேளாமல் துறவி மூவர்
    சாய்ந்துமலர் பறிக்கின்ற காட்சி யெல்லாம்
இத்தரையில் தமிழர்தம் கலைமேன் மையை
    இயம்புகின்ற பலவண்ண சொற்க ளன்றோ!

—பாவலர் **கருமலைத் தமிழாழன்**

# வள்ளுவமும் இஸ்லாமும் போதிக்கும் நாவடக்கம்

முனைவர் **மு.ரா.மஜிதா பர்வின்**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி, திருநெல்வேலி



ஒருவன் தனது நாவைப் பயன்படுத்தும் விதத்தை வைத்தே அவனது குணங்களை மதிப்பிட முடியும். ‘நல்ல மனிதன்’ என்ற மரியாதையை மக்களிடமிருந்தும் இறைவனிடம் இருந்தும் பெற்றுக் கொடுப்பதில் நாவு மிக முக்கியப் பங்கு வகிக்கின்றது. நாவினால் பிறரைத் துன்புறுத்தாதவனுக்குச் சிறந்த முஸ்லிம் என்ற பட்டத்தை அல்லாஹ்வின் தூதர் நபி (ஸல்) அவர்கள் வழங்கியுள்ளார்கள்.

மனிதனின் உயர்வுக்கும் தாழ்வுக்கும் காரணமாகத் திகழ்வது எது என்றால் நாக்கு என்று சொல்லலாம். ஒருவரிடம் தன்னடக்கம் இருக்க வேண்டுமென்றால் அவனிடம் நாவடக்கம் இருக்க வேண்டும். இந்த நாவை எவ்வாறு பயன்படுத்துகின்றோமோ அதன்படியே முடிவு இருக்கும். நாவடக்கம் ஒருவனுக்கு எவ்வளவு முக்கியம் என்பதை ஒரு சிறுகதையின் மூலம் அறியலாம்.

ஒரு சிறுவனுக்கு எப்போதும் அதிகக் கோபம் வரும் அவனுடைய தந்தை எத்தனையோ முறை அவனிடம் அது நல்லதல்ல என்று சொல்லிப் பார்த்தார். அவனுக்குக் கோபம் கட்டுப்படவே இல்லை. ஒரு நாள் அவன் தந்தை ஒரு பை நிறைய ஆணிகளையும் ஒரு சுத்தியையும் கொடுத்து, ஒவ்வொரு முறை கோபம் வரும்போதும், தங்கள் வீட்டிற்கு வெளியே வெள்ளைச் சாயம் போட்ட கட்டை வேலியின் மீது, ஓர் ஆணியை அடிக்கச் சொன்னார். அதன்படி, அவன் அடித்தபோது, முதல் நாளில் 37 ஆணிகளை அடித்தான். அடுத்த சில வாரங்களில், அவன் கோபம் குறையத் தொடங்கியது. ஆணிகளின் எண்ணிக்கையும் குறையத் தொடங்கியது. ஏனெனில் ஒவ்வொரு முறை கோபம் வரும்போதும், வெளியே போய் ஆணிகளை அடிப்பதற்குப் பதிலாகக் கோபத்தைக் கட்டுப்படுத்துவது அவனுக்கு எளிதாகப்பட்டது. அதை அவன் தந்தை கண்டபோது, அவனிடம் ஒவ்வொரு நாளும் போய் அவன் அடித்த ஆணிகளைப் பிடுங்கச் சொன்னார். அவன் அப்படியே எல்லாவற்றையும் பிடுங்கி முடித்தான்.

அன்று சாயங்காலம் அவன் தந்தை அவனது கையைப் பிடித்து அவனைக் கூட்டிக் கொண்டு போய், ‘மகனே, நீ செய்த காரியம் நல்லது, ஆனால் நீ ஆணி அடித்த இடத்தைப் பார். இந்த அழகிய வேலி இனி அப்படி இருக்கப் போவது இல்லை. நீ ஆணியடித்ததனால் ஏற்பட்ட துளைகளைப்பார், அது துளைகளோடு காட்சியளிக்கிறது. அப்படித்தான் நீ அன்புகூறுகிற ஒருவரிடம், நீ கோபத்தோடு

பேசிய ஒவ்வொரு வார்த்தையும் இந்தத் துளைகளைப் போல், இருதயத்தில் மாறாத வடுக்களை ஏற்படுத்துகிறது. நீ கோபம் போன பிறகு எத்தனை முறை மன்னிப்புக் கேட்டாலும் அந்த வடுக்கள் மாறாமல் அப்படியேதான் இருக்கும். ஆகவே கோபத்தைக் குறைத்து, கோபமான வார்த்தைகளைப் பேசாதபடிக் காத்துக் கொள்' என்று அவனுக்கு அறிவுரை கூறினார்.

அபூ மூஸா அல்—அஷ்அரீ (ரலி) என்ற நபித் தோழர் கூறுகின்றார், "அல்லாஹ்வின் தூதரே! முஸ்லிம்களில் சிறந்தவர் யார் ?" என்று நான் கேட்டேன். "யாருடைய நாவை விட்டும் கையை விட்டும் பிற முஸ்லிம்கள் பாதுகாப்புப் பெறுகின்றனரோ அவர்தான் உண்மையான முஸ்லிம்" என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (நூற்கள்: புகாரி, முஸ்லிம்)

அல்லாஹ் படைத்த உயிரினங்களுக்கு நாவு மிக முக்கியமானதொரு உறுப்பாகும். நாவின் அமைப்பும் அதிலுள்ள உணர்ச்சிகளும் பல்வேறு பயன்களைத் தருகின்றன. மற்ற உயிரினங்களை விடவும் (குறிப்பாக) மனிதனின் நாவின் உபயோகம் மிகவும் அதிகமாகும். மேலும் மனிதனின் உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்தும் ஆயுதமாகவும் அதுவே திகழ்கின்றது.

இறையச்சமுள்ள அடியான் நல்லதையே பேச வேண்டும். நேர்மையானவற்றை மட்டும் பேசுபவர்களது செயல்களை அல்லாஹ் சீராக்கி வைப்பான். அத்தகையவர்களது (ஏனைய) பாவங்களையும் அல்லாஹ் மன்னிப்பான். நா காக்கும் நல்லடியார்களை அல்லாஹ் தனது அன்புக்கும் அருளுக்கும் சொந்தமாக்கிக் கொள்கின்றான். நாவைப் பேணுவதன் அவசியம் பற்றி அல்லாஹ்வின் தூதர் நபி (ஸல்) அவர்கள் கூறுகையில்,

"அல்லாஹ்வையும் மறுமை நாளையும் விசுவாசிக்கின்றவர் நல்லதைப் பேசட்டும். அன்றேல், மௌனமாக இருக்கட்டும்" (அறிவிப்பவர்: அபூ ஹுரைரா (ரலி), நூல்கள்: புகாரி, முஸ்லிம்) என்று கூறுகிறார்.

நாவின் செயல்பாட்டால் நல்ல பெயர் சம்பாதித்து 'சிறந்த மனிதன்' என்ற பெயரை வாங்கி இம்மையிலும் மறுமையிலும் சிறப்பிடத்தைப் பெறுகின்றார்கள். சிலர் இந்த நாவால்தான் முறையற்ற வழியில் பேசி, மனிதர்களில் மட்டமானவன் என்ற இடத்தையும் பிடிக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், மறுமையில் அல்லாஹ்வின் கோபத்திற்கு ஆளாகின்றார்கள். இப்படிப்பட்ட நாவைப் பற்றி அல்லாஹ் திருமறையிலும் நபி மொழியிலும் கூறும் பொழுது,

"எதைப் பற்றி உமக்குத் தீர்க்கமான ஞானமில்லையோ அதைச் செய்யத் தொடர வேண்டாம். நிச்சயமாக மறுமையில் செவிப்புலனும் பார்வையும் இருதயமும் இவை ஒவ்வொன்றுமே அதனதன் செயல் பற்றிக் கேள்வி கேட்கப்படும்" (அல்குரான் – 17:36) என்று கூறப்பட்டுள்ளது.

எந்த ஒரு விஷயம் நமக்குத் தெளிவாகத் தெரியவில்லையோ அதைப் பற்றிப் பேசக் கூடாது. அதுபோல் பேசுவது பல வழியிலும் மற்றவர்களுக்குத் துன்பம் தருவது மட்டும் அல்லாமல், எவ்வளவு பெரிய தவறாகி விடுகிறது. "நீங்கள் பேசினால் நல்லதைப்

பேசுங்கள். அல்லது அமைதியாக இருந்து விடுங்கள் என்று கூறியுள்ளார்கள் ?''. (ஆதாரம் : புகாரி, முஸ்லிம்) என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

''யார் தனது இரு தாடைகளுக்கிடையே உள்ளதை(நாவை)யும் இரு தொடைகளுக்கு இடையே உள்ளதை(மர்மஸ்தானத்தை)யும் பாதுகாப்பதாகப் பொறுப்பேற்றுக் கொள்கிறாரோ, அவருக்குச் சுவனம் கிடைத்திட நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன்''. (அறிவிப்பவர்: ஸஹ்ல் இப்னு ஸஃத் (ரலி), நூல்: புகாரி, முஸ்லிம்) என்று நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

அல்லாஹ்வின் தூதரே ''நீங்கள் பயப்படக்கூடிய மிகப் பயங்கரமான விடயம் எது ?'' என்று கேட்டதற்கு நபி (ஸல்) அவர்கள் ''தமது நாவைப் பிடித்து இதற்குத்தான் (பயப்படுகிறேன்)'' எனக் கூறியுள்ளார்கள். (அறிவிப்பவர்: ஸுஃப் யான் பின் அப்துல்லாஹ் (ரலி), நூல்: திர்மிதி)

நாம் சில வேளைகளில் நல்லதா ? கெட்டதா ? எனச் சிந்திக்காமலேயே சில வார்த்தைகளைப் பேசிவிடுகிறோம். அவை நல்லதாயின் அல்லாஹ்வின் அருள் கிடைக்கும். மாறாக அவை கெட்டதாயின் அவ் வார்த்தைகளே நம்மை நரகத்தில் தள்ளிவிடும். எனவே பேசுகின்ற வார்த்தைகளில் மிகவும் கவனம் தேவை.

வீண் வார்த்தைகள் பேசுதல், பொய்யுரைத்தல், புறம் பேசுதல், கோள் சொல்லுதல், பிறரைப் பரிகசித்தல், கேலி – கிண்டல் செய்தல், அவதூறு கூறுதல், சாபமிடுதல், குறை கூறுதல், காரணமின்றி ஏசுதல், இட்டுக்கட்டிப் பேசுதல், ஆபாசமான வார்த்தைகளைப் பேசுதல், ஆபாசப் பாடல்களைப்பாடுதல், பட்டப் பெயர் சொல்லுதல், கெட்ட வார்த்தைகளை உபயோகித்தல் ஆகியன அன்றாடம் நாவினால் ஏற்படும் பாவச் செயல்களாகும். இஸ்லாம் இவற்றை வன்மையாகக் கண்டிக்கிறது. இவை தீயோரின் அடையாளங்கள் என்று சுட்டிக் காட்டுகிறது. எனவே, இவற்றை விட்டும் நம் நாவைக் காத்துக் கொள்ள வேண்டும்.

நடைமுறை வாழ்வில் நாவினால் பல தீமைகள் ஏற்படுகிறது. வீண் வார்த்தைகள் பேசுதல், பொய்யுரைத்தல், புறம் பேசுதல், கோள் சொல்லுதல், பிறரைப் பரிகசித்தல், கேலி கிண்டல் செய்தல், அவதூறு கூறுதல், சாபமிடுதல், குறை கூறுதல், காரணமின்றி ஏசுதல், இட்டுக்கட்டிப் பேசுதல், ஆபாசமான வார்த்தைகளைப் பேசுதல், ஆபாசப் பாடல்கள் பாடுதல், பட்டப்பெயர் சொல்லுதல், கெட்ட வார்த்தைகளை உபயோகித்தல் முதலியவை. அன்றாடம் நாவினால் ஏற்படும் பாவச் செயல்களாகும். இஸ்லாம் இவற்றை வன்மையாகக் கண்டிக்கிறது. இவை தீயோரின் அடையாளங்கள் என்று சுட்டிக் காட்டுகிறது.

நாவடக்கம் உடையோர் நல்லனவற்றை நயமோடு, இரக்க உணர்வுடன் இள முறுவலுடன், வஞ்சனையின்றி, தஞ்சமடையும் வண்ணம் இனிக்கப் பேசி, இனியன செய்து, இம்மை மறுமை இரண்டிலும் நற்பேறு பெறுவர்.

''தேவையற்ற உரையாடல்களில் ஈடுபடாதிருப்பது நற்குணங்களில் ஒன்று'' என்று பொற்புடை நபி (ஸல்) அவர்கள் புகன்றதை அறிவிப்பவர் அபூஹுரைரா(ரலி) நூல் – முஅத்தா, திர்மிதீ.

தொடரும்...

# ஒளி மயம்!

உங்களைப் பார்க்கிறேன்
என் அன்புக்குரியவரே.
உங்கள் நம்பிக்கையார்வத்தை
இரு கரங்களாலும் பற்றிக்கொள்ளுங்கள்
அனைத்து அமளிகளினாலும்
நான் சோர்வையே உணருகிறேன்
ஆனால், விடுவதாக இல்லை
உதிர்வதும்... வளைவதும்
வளர்வதும்... முயல்வதும்
தளரா முயற்சி.
நீங்கள் சொல்வது சரியே
உங்கள் பழைய வாழ்க்கை இப்போது
உங்களுக்குப் பொருந்தாது
உள்ளேயும் வெளியேயும்
உங்களுக்காக மிகையாகவே காத்திருக்கிறது
உங்கள் நம்பிக்கையார்வத்தை
தொடர்ந்து பற்றிக்கொள்ளுங்கள்
இந்த உலகுக்கு அது
அதிகம் தேவையாயிருக்கிறது.

## Bright Light

I see you, darling.
Holding on to your hope with both hands.
Feeling exhausted with all the turbulence.
But not letting go.
Shedding and bending
and growing and trying. So much trying.
And you are right.
your old life is a bad fit for you now.
There is more for you out there
There is more for you inside too.
Keep holding on to your hope.
The world needs more of that right now

-by S.C. Lourie



– சந்திரா மனோகரன்

# உத்தராகண்ட் தமிழ்ச் சங்கத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

திரு. பழனி
தலைவர்,
உத்தராகண்ட் தமிழ்ச் சங்கம்



இறை நிலம் என்னும் பொருளில் 'தேவ பூமி' என்றழைக்கப்படும் உத்தராகண்ட் மாநிலம் தனது பெயருக்கேற்றாற்போல உலகப்புகழ் பெற்ற ஆலயங்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இமயமலைத் தொடர்களால் ஒப்பனை பூசிக்கொண்டிருக்கும் உத்தராகண்டில்தான் பத்ரிநாத், கேதார்நாத், கங்கோத்ரி, யமுனோத்ரி, ரிஷிகேஷ், ஹரித்வார் எனப் பல்வேறு புகழாலயங்களும் புண்ணியத் தீர்த்தங்களும் உள்ளன. இயற்கையின் உச்சம் என்று சுட்டும் வகையில் சிவபெருமானின் உச்சியில் இடம்பெற்றுள்ளதாகப் புராணங்களில் குறிப்பிட படும் கங்கை நதியும் இங்கிருந்தே பிறக்கிறது.

இத்துணைச் சிறப்பு மிக்க உத்தராகண்ட் மாநிலத்தின் பல பகுதிகளிலும் நமது தமிழர்களும் பரவி வாழ்கின்றனர்.

இங்குள்ள தமிழர் கள் இராணுவம், துணை இராணுவம், காவல்துறை, தொழிற்சாலைகள், மருத்துவக் கல்லூரிகள், மருத்துவமனைகள், இந்திய வனவியல் ஆராய்ச்சி நிறுவனம், இந்தியத் தொழில்நுட்பக்கழகம், நிதி நிறுவனங்கள், உணவகங்கள் உள்ளிட்ட பல துறைகளில் பணிபுரிவதோடு சொந்தமாகத் தொழிற்கூடங்கள் அமைத்தும் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் சேர்ந்தும் பணியாற்றுகின்றனர்.

## தனித்துவம்

எங்கு வாழ்ந்தாலும் செந்தமிழ் நாட்டின் பழம்பெருமை மிக்க பண்பாட்டினைக் கடைப்பிடித்து வருபவர்கள்தாம் தமிழர்கள். அந்த வகையில் உத்தராகண்ட் மாநிலத்தில் வாழும் நம்மவர்களும் தமிழருக்கே உரித்தான பண் பாட்டுச் சிறப்புடன் வாழ்ந்து வருகின்றனர். பொங்கல், கிறிஸ்துமஸ், தீபாவளி, திருக்கார்த்திகை முதலிய பண்டிகைகளை எந்தவிதப் பாகுபாடுமின்றி ஒற்றுமையாய்க் கொண்டாடும் வழக்கம் உடையவர்களாயும் உள்ளனர். பண்டிகை நாள்களிலும் திங்களிறுதி நாள்களிலும் ஒன்றாய்க் கூடிக் குதூகலிக்கும் வழக்கத்தினையும் பெரும்பாலான தமிழ்க் குடும்பங்கள் இங்குப் பின்பற்றி வருகின்றன.

## தமிழ்ச் சங்கமும் தனிப்பெரும் பணிகளும்

சாதி, மதம், பொருளாதாரம், பதவி முதலான எந்தவிதமான வேற்றுமைகளுமின்றித் தமிழர் என்ற ஒற்றைச் சொல்லையே அடிப்படையாகக் கொண்டு "தமிழைப் போற்றுவோம் தமிழர் நலம் பேணுவோம்" என்ற குறிக்கோள் வாசகத்துடன்

தொடங்கப்பட்டதுதான் உத்தரா கண்ட் தமிழ்ச் சங்கம். இச்சங்கத்தின் ஆறாவது ஆண்டுவிழா இவ்வாண்டு நவம்பர் மாதம் பதின்மூன்றாம் நாளில் வெகு சிறப்பாக ஹரித்துவாரில் கொண்டாடப்பட்டது. பல்வேறு கலை நிகழ்ச்சிகள், பட்டிமன்றம், விளையாட்டுப் போட்டிகள், சிறப்பு விருந்து எனச் சிறப்பான திட்டமிடலோடு நடைபெற்ற ஆண்டுவிழாவில் பிறமொழி பேசும் பல மாநிலத்து அறிஞர்களும் அழைக்கப்பட்டுச் சிறப்பிக்கப்பட்டனர். வேற்றுமையில் ஒற்றுமை என்னும் இந்தியப் பண்பாட்டிற்குச் சான்றாகத் திகழும் உத்தராகண்ட் தமிழ்ச் சங்கத்தின் வாயிலாக எண்ணிலடங்கா நற்பணிகளும் செய்யப்பட்டு உள்ளன. தமிழகத்திலிருந்து உத்தராகண்டிற்கு வருகைதரும் பெரும்பாலான நம்மவர்களுக்கு ஒரு இணைப்புப் பாலமாகத் திகழ்வதும் உத்தராகண்ட் தமிழ்ச் சங்கம்தான் என்பது முற்றிலும் உண்மை.

### திருவள்ளுவர் சிலையும் தமிழ்ச் சங்கமும்

உத்தராகண்ட்டின் ஹரித்வாரில் உள்ள 'ஹர்க்கி பவுரி' என்ற இடத்தில்தான் கங்கா ஆர்த்தி என்னும் பெயரில் கங்கையைத் தீபமேற்றி வழிபடும் உலகப் புகழ்பெற்ற நிகழ்ச்சி பலநூறு ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. அங்கு நிறுவுவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் தருண்விஜய் அவர்களின் பெரும் முயற்சியால் திருவள்ளுவர் சிலை ஒன்று வடிவமைக்கப்பட்டுக் கொண்டுவரப்பட்டது. ஆனால் அங்குள்ள சிலரின் காழ்ப்புணர்ச்சியால் சிலை அங்கே நிறுவப்படாமல் தடுக்கப்பட்டது.

தலைவர்

**திரு பழனி**

**தொடர்புக்கு :**

**உத்தராகண்ட் தமிழ்ச் சங்கம்**

Flat No. C - 107
Raghunath residency,
Bahadrabad Haridwar,
Uttrakhand - 249402.

**மின்னஞ்சல் முகவரி**

uktamilsangam@gmail.com

**தொடர்புக்கு**

09045403153

அதன்பிறகு ஹரித்வாரில் உள்ள சங்கராச்சாரியா சவு என்னும் இடத்தில் அந்தச் சிலை நிறுவப்பட்டுத் திறப்பு விழாவிற்கு முதலமைச்சர் திரு. ஹரிஷ் ராவத் அவர்களும் வருகை தந்திருந்தார். ஆனால் திருவள்ளுவரின் அருமையறியா அறிவிலிகள் சிலர் அங்கு நிறுவப்பட்டதற்கும் எதிர்ப்பு தெரிவித்துப் போராடினர். அதன் விளைவாகச் சிலையைத் திறக்க முடியாமல் முதலமைச்சர் திரும்பிச் செல்லவேண்டிய சூழல் உருவானது. அத்துடன் சிலையும் அங்கிருந்து அகற்றப்பட்டது. உலகப் பொதுமறை தந்த தெய்வப்புலவர் வள்ளுவரின் சிலைக்கு ஏற்பட்ட நிலைமையால் உத்தராகண்ட் வாழ் தமிழர்கள் மட்டுமல்லாமல் உலகெங்கும் வாழும் தமிழர்களும் உள்ளம் வருந்தினர்.

எப்படியும் திருவள்ளுவரின் சிலையை நிறுவியே தீரவேண்டும் என்ற குறிக்கோளோடு உத்தராகண்ட் தமிழ்ச் சங்கத்தினர் ஒன்றுகூடி ஆலோசனை நடத்தினர். அதன் விளைவாகப் பிரதமர், தமிழகத்தின் அப்போதைய முன்னாள்






முதலமைச்சர் மற்றும் உத்தராகண்ட் முதலமைச்சர் ஆகியோருக்குச் சங்கத்தின் வாயிலாகச் சிலையை மீண்டும் நிறுவ வேண்டுகோள் விடுக்கப்பட்டது. சங்கத்தினரின் தொடர் முயற்சிக்குப் பிறகு கங்கை நதியோரத்தில் அமைந்துள்ள மேளாபவன் பூங்காவில் திருவள்ளுவர் சிலை நிறுவப்பட்டு அப்போதைய முதலமைச்சர் திரு. ஹரிஷ் ராவத் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அந்தச் சிலை திறப்பு விழாவில் உத்தராகண்ட் தமிழ்ச் சங்கத்தினரும் பங்கேற்றுச் சிறப்பித்தனர். விழாவின் நிறைவில் மேளாபவன் பூங்கா இனித் திருவள்ளுவர் பூங்கா எனப் பெயர் மாற்றம் செய்யப்படும் என்று முதலமைச்சர் திரு. ஹரிஷ் ராவத் அவர்கள் தெரிவித்ததற்குச் சங்கத்தின் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

### தமிழ்க் கல்வி

தமிழ் மொழி கற்க முடியாத மாநிலத்தில் வாழ்ந்தாலும் தமிழ்மொழி அறியாக் குழந்தைகளாக நமது தமிழ்க் குழந்தைகள் இருக்கக்கூடாது என்ற நல்லெண்ணத்தோடு உத்தராகண்ட் தமிழ்ச் சங்கத்தால் துவங்கப் பட்டதுதான் குழந்தைகளுக்கான “இணையவழித் தமிழ்க் கல்வித் திட்டம்”. சங்கத்தின் பொறுப்பாளர்களாக இருக்கும் அறிஞர்களின் மூலம் ஒவ்வொரு சனிக் கிழமையும் நடத்தப்பட்ட தமிழ்க் கல்வியின் வாயிலாகப் பெரும்பாலான நமது குழந்தைகள் அடிப்படைத் தமிழை முழுமையாகக் கற்றுக் கொண்டனர் என்பது பெருமிதத்திற்குரிய செயல். தமிழகத்தில் பிறந்து இமயமலையோர மாநிலத்தில் வாழ்ந்து கொண்டிருந்தாலும் எண்ணங்களில் எல்லாம் தமிழையும் தமிழர் மாண்பினையும் நிறைத்து வைத்துச் செயலாற்றிக் கொண்டிருக்கும் உத்தராகண்ட் மாநிலத் தமிழ்ச் சங்க நிர்வாகிகளும், உறுப்பினர்களும் தமிழ் கூறும் நல்லுலகினால் என்றென்றும் போற்றப்படுவர் என்பது திண்ணம்.








# உள்ளம் பெருங்கோவில் ஊனுடம்பு ஆலயம்

–டாக்டர் **வி.ஜி.சந்தோசம்**

**“என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே..”**

என்று கூறிய திருமூலர். நம்முடைய உள்ளத்தையும் உடலையும் பேணிக்காத்தல் வேண்டும் என்று விரும்புகிறார். நம்முடைய உடலை இறைவன் வாழும் இடமென எண்ணி ஓம்புதல் வேண்டும் எனவும் உடல் நலம் சிறந்தவரிடம் மட்டுமே, அறிவு நலம் அமைந்து இருக்கும். அதனால்தான், சான்றோர் பெருமக்கள் உடம்பினை இறைவன் தன் உறைவிடமாகவே திருமூலர் அவர்கள் உணர்ந்துரைக்கின்றார்கள்.

அக்கருத்தை,

**“உடம்பார் அழியின் உயிரார் அழிவர்”**

**“உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தேன்**
**உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே”**

**“நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்**
**பட மாடுக் கோயில் பகவற்கு அதுஆமே”**

**“உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்”**

என்றெல்லாம் திருமூலர் கூறுவதிலிருந்து, நாம் நன்கு உணரலாம். மேலும், உடலோம்பலின் முக்கியத்துவத்தை உணர்த்த எண்ணிய திருமூலர் தன்னுடைய திருமந்திரம் வழியே நமக்குக் கூறுகிறார்.


**“உடம்பினை முன்னம் இழுக்கென்று இருந்தேன்**
**உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்**
**உடம்பிலே உத்தமன் கோயில் கொண்டான் என்று**
**உடம்பினை யான்இருந் தோம்புகின் றேனே”**

மனித வாழ்வில் நாம் படும் துன்பம் தொல்லைகளால் நமது உடம்பைப் பாதுகாக்காமல் விட்டுவிட்டால், நோய்கள் தலையெடுக்கும், உடம்பினை வாட்டும். அதன் காரணமாக நமது அன்றாட வாழ்க்கை பல தடைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். நமது நோக்கங்கள், திட்டங்கள் வெற்றி காண முடியாமல் போகும்.

மனிதன் அறநெறியோடு வாழாமல், மனம் போன போக்கில், கால் போன போக்கில் வாழ்ந்தால் அம்மனிதனுடைய உடம்பு கெடும். நாடி நரம்புகள் தளர்ந்திடும்; மனம் கலங்கும், அறிவு மங்கும். எனவே “நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வமெனக்” கருதி, நல்வழியில் நடந்து, உடம்பினைக் காத்து, நாம் நீடூழி வாழ வேண்டும்.

**குறள் போல் வாழ்க!**
**குவலயம் போற்ற வாழ்க!**

# இலக்கிய நேர்மை...
## (ரகுநாதன் கட்டுரைகள்)




இலக்கிய நேர்மை நூலில் இதுவரை நூலாக்கம் பெறாத தொ.மு.சி ரகுநாதனின் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இக்கட்டுரைகள் வகைப்படுத்தம் செய்யப்பட்டுக் காலவரிசையில் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. இக்கட்டுரைகளைத் தொகைப்படுத்தியவர் தொ.மு.சியின் நெருங்கிய நண்பர் இளசை மணியன் ஆவார். மொத்தம் 45 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன அதில் 17ஆவது கட்டுரையாகப் புத்தக விற்பனை எனும் கட்டுரையை வாசிக்கும் பொழுது அதில் எழுத்தாளனும் பதிப்பாளரும் புத்தக விற்பனையாளரும் கண்ட பல நெருக்கடிகளை எழுதியுள்ளார். வாசகர்களை நோக்கிப் புத்தகங்களைக் கொண்டு செல்ல மேற்காணும் முயற்சிகளும் அதில் கிடைக்கும் அனுபவங்களும் இன்றும் காண்கிறேன் கண் இமைகளில்.

'புத்தக விற்பனை' எனும் அந்தக் கட்டுரையில் பத்து லட்சம் மக்கள் கண்டு களித்த படம் என்று திரைப்படக்காரர்கள் விளம்பரம் செய்வது போலவே, புத்தக வியாபாரிகளும் செய்கிறார்கள். பெர்னாட்ஷாவின் பிறந்த தினப் பதிப்பாக, பத்து லட்சம் பிரதிகள் விற்ற புத்தகம் என்று ஒரு விளம்பரம். பென்குவின் கம்பெனியார் அவருடைய புத்தகங்கள் ஒவ்வொன்றிலும் பத்து லட்சம் பிரதிகள் அச்சடித்தார்கள். இதுபோலவே, சில நூல்கள் இருபது முப்பது பதிப்புகளாக, தொடர்ந்து வெளிவருவதுண்டு. ஆனால், எல்லாப் புத்தகங்களுமே சந்தையில் செலாவணியாகி விடுகிறதா என்றால் அது




## இரா.மு.தனசேகரன்

நாகர்கோவில்


**தலைப்பு : இலக்கிய நேர்மை**

**வகை : கட்டுரை**

**ஆசிரியர் : இளசை மணியன்**

**வெளியீடு : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்**

கிடையாது. சில புத்தகங்கள் விற்காமல் கட்டுக் கிடையாகக் கிடப்பதும் உண்டு. பின்னால் அந்தப் புத்தகங்கள் மூர்மார்க்கெட்டுக்கோ, மரீனா பீச்சின் தளவரிசைக்கோ, பழைய பேப்பர் வியாபாரியின் சாக்கு மூட்டைக்கோ போய்ச் சேரும்.

ஆசிரியர்கள் துன்பப்பட்டு மூளையைக் குடைந்து தோண்டி, எழுதினாலும் சில புத்தகங்கள் விற்பதில்லை. நல்ல புத்தகம் செல்லுபடி ஆகாமல் போகாது என்று சொல்லலாம். எனினும் விற்பனையில் முந்திக்கொள்ள வேண்டுமே.

காப்பீடு திட்டங்களின் முகவர் மாதிரி ஆசிரியனே புத்தகத்தைக் கையோடு தூக்கிச் சென்று, அதன் அருமை பெருமைகளை அளந்து விற்றுத் தள்ள முடியுமா ? அல்லது நடுச்சந்தியில் கடை பரப்பிக் கொண்டு, காபூலிக்காரனின் தேள்கடி விளம்பரம் போல, உபந்நியாசம் பண்ணுவதா ? இந்த மாதிரித் துன்பங்கள் ஆசிரியனுக்கும் பதிப்பாளனுக்கும் ஏற்படுவது உண்டு.

ஏதென்ஸ் நகரச் சபையிலே அனக்ஸன் டிரைட்ஸ் என்ற ஆசிரியருக்கும் அவருடைய விரோதி ஒருவருக்கும் நடக்கும் விவாதங்களின் காரணமாக, அவருடைய கையெழுத்துப் பிரதிகளைப் பொட்டலம் மடித்துக் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுக் கொண்டே இருந்தது. காதரினாட் என்ற ஆசிரியர் சின்னஞ்சிறு பிரசுரங்களாகவே எழுதித் தள்ளினார்.

அதன் காரணமாகவே, ‘சிறு புத்தகங்கள் எழுதும் பெரிய ஆசிரியன்’ என்ற பாராட்டும் அவருக்குக் கிடைத்தது. இவருடைய புத்தகங்கள் நாலு பக்கங்களுக்கு மேலிராது. தமது புத்தகங்களைத் தாமே அச்சடிப்பார்; தாமே கொண்டு போய்ப் பழைய புத்தகக் கடையில் சேர்த்து விடுவார். இப்படி நடந்தது அவர் விற்பனை!

நிக்கலஸ் டி’ லைரா, என்பவர் பைபிளுக்கு உரை எழுதி, அதை அச்சிட ஆளையும் பிடித்துவிட்டார். ஆனால் புத்தகக் கடையை விட்டு, ஒரு புத்தகம் கூட நகரவில்லை. கடைசியில் பதிப்பகத்தார் மஞ்சள் கடுதாசி – (இன்ஸாரல்வென்ஸி) நீட்டவேண்டிய நிலைமையிலிருந்து தம்மைக் காப்பாற்றும்படி போப்புக்கு விண்ணப்பம் செய்து கொண்டார்களாம்.

பிரபல ஆங்கில எழுத்தாளரான கோல்ரிட்ஜ் தமது நண்பர் ஒருவர் உதவியால் தமது ‘விடுதலை வழி’ என்ற நூலை வெளியிட்டார். ஆனால் விமர்சகர்கள் அந்த நூலை இரக்கமற்றுத் தாக்கினார்கள். விமர்சகர்கள் முகத்தில் கரியைப் பூச வேண்டும் என்ற நோக்கத்தோடு உடனடியாய் இரண்டாவது பதிப்பையும் கொண்டு வந்தார். ஆனால், முதற்பதிப்பே ஆமை நடைதான் நடந்தது.

இரண்டு ஆண்டு கழித்துப் புத்தகம் போட்ட நண்பர், வியாபாரிகளிடம் கணக்குக் கேட்டு எழுதினார். வியாபாரியின் ஆளும் கணக்கோடு வந்து சேர்ந்தான். ஆசிரியர் கணக்கைப் புரட்டிப் பார்த்தார். செலவு வகைகளைப் பார்த்தார். கடைசியில், "இத்தனை ஆயிரம் புத்தகங்களையும் விற்பதற்கு மூன்று கினிதானா செலவாயிற்று?" என்று கேட்டார். வந்தவன் "ஐயா, ஒரு புத்தகம் கூட விற்கவில்லை. இந்தப் புத்தகங்களையெல்லாம் கிடங்குக்குக் கொண்டு சேர்ப்பதற்குக் கொடுத்த வண்டிச் சத்தம்தான் அந்தச் செலவு!" என்றான். கடைசியில் அந்தப் புத்தகங்கள் விற்காமலே ஆசிரியரின் வீட்டிலேயே கிடந்தன. கடைசியில், அந்தப் புத்தகங்கள் வரும் போகும் விருந்தினருக்கும் நண்பர்களுக்கும் அன்பளிப்புகளாகவே வழங்கப்பட்டுக் காலியாயின.

கோல்ரிட்ஜ் இதனாலெல்லாம் சலித்து விடவில்லை. 'காவல்காரன்' என்ற சஞ்சிகையைத் தமது சொந்தச் செலவில் தொடங்கினார். அப்படியும் இப்படியுமாகக் கஷ்டப்பட்டு ஆயிரம் சந்தாதாரர்களைப் பதிவு செய்தார். முதல் இதழ் வெளிவந்தது அதைப் பற்றி காரசாரமான விமர்சனங்கள் வந்தன. கோல்ரிட்ஜ் விமர்சனங்களுக்குப் பதில் கொடுத்தார். அதன் காரணமாக, ஐந்தாறு பேர் ஆதரவை இழந்தார். அடுத்த இரண்டு இதழ்கள் வந்தவுடன் இருந்த ஆதரவாளரும் போய்விட்டனர். ஆசிரியர் வருத்தப்பட்டு, மாடியிலிருந்து கீழிறங்கி வந்தார். ஆனால், கீழ்வீட்டில் அவருடைய வேலைக்காரி இவருடைய பத்திரிகைப் பிரதிகளைக் கொண்டு அடுப்பு மூட்டிக் கொண்டிருந்தாளாம்.

அதிர்ஷ்ட தேவதையின் கருணையால் தான் கோலரிட்ஜின் பாடல் தொகுதி மட்டும் ஏராளமாக விற்பனை ஆயிற்று என்று சொல்ல வேண்டும். கோல்ரிட்ஜின் பாடல்களைப் பதிப்பித்த லாங்மன்ஸ் கம்பெனியார் இந்த அதிர்ஷ்டம் எப்படி வந்தது என்றும் தெரிவிக்கிறார்கள்.

கோல்ரிட்ஜின் பிரபலப் பாடலான "பண்டைக் கப்பல் மீகாமன்" (Anicent Mariner) என்ற பாடலைக் கண்டுவிட்டு, அந்தப் புத்தகம் முழுவதுமே கடற் கவிதைகள் என்று ஏமாந்து மாலுமிகள் அள்ளிக் கொண்டு போய்விட்டார்களாம்.

தாமஸ் ஹார்டியின் புதினங்கள் இன்று பிரபலமானவை. ஆனால், தொடக்க காலத்தில் அவை எப்படி விற்றன தெரியுமா? அவருடைய புத்தகங்களை வெளியிட்ட டின்ஸ்லி முதன் முதலில் ஐந்நூறு பிரதிகளே அச்சடித்தார். ஆனால் இருபதுக்கு மேல் விற்கவே இல்லை. உடனே மீதமுள்ள பிரதிகளையெல்லாம் சாதா அட்டை போட்டு ஒண்ணேகால் ஷில்லிங் வீதம் ரோட்டுக் கடையில் விற்று விட்டார் என்று முடிகிறது அந்தக் கட்டுரை. இன்று மக்கள் மத்தியில் புத்தக வாசிப்பைக் கொண்டு சேர்க்க அரும்பாடுபட்டுக் கொண்டிருக்கும் பதிப்பாளர்களையும் விற்பனையாளர்களையும் வாசகனின் கண்முன் நிறுத்துகிறார் தொ.மு.சி. வாசகர்களுக்கு இலக்கியம் சார்ந்த விருந்து படைக்கிறது இந்நூலில் இடம் பெற்றுள்ள பல கட்டுரைகள்.■



# காலம் மாறிவிட்டது..!

–கவிஞர் புவனா காமராஜ், திருப்பூர்

கரைந்தே
போகிறது
காக்கையின்
கூக்குரல்
வரவில்லையே
ஒரு பிடி
சோறுகூட......!
காலம்
மாறி விட்டது
வீட்டின்
அழைப்புமணி
அழுத்தினால்
தான்
சோறு
கிடைக்குமென்று......!
புரியும்
ஒரு
நாள்
காக்கைக்கும்......!



# பொய்மையும் வாய்மையுடைத்து!

குணாவுக்கு 19 வயதாகும்போது ஜூனியர் கல்லூரிப் படிப்புக்கு இணையான International Bachelorette ஆக வெளிவருவான்.

■தொடர்ச்சி...

புதுமைத்தேனீ
மா.அன்பழகன்
சிங்கப்பூர்



இவற்றையெல்லாம் நினைத்துப் பார்த்த தாய் புராகிரஸ் ரிப்போர்ட்டைக் குணாவிடம் கொடுக்கும்போது "குணா! பெயிண்டிங்கில் நீ தான் முதல் மார்க் எடுத்திருக்கிறாய். இருந்தாலும், மற்ற பாடங்களில் குறைஞ்சது பாஸ் மார்க் வாங்கணும்கிறது தெரியும்ல ? அத ஞாபகம் வச்சிக்கோ" என்று சொன்னார்.

தாய் கனவு கண்டவாறே சோட்டாவில் நடந்த இறுதியாண்டுத் தேர்வில் குணா வெற்றி பெற்றுவிட்டான். சிரமம் இல்லாமல் திட்டமிட்டவாறு லாசாலே (Lasalle) காலேஜ்ஆப் ஆர்ட்ஸில் இடம் வாங்கிக் கொடுத்துவிட்டார்.

சில ஆண்டுகள் உருண்டோடின.

மே மாதம் 8ஆம் நாள். மாலை மணி 5. குணாவின் தாயார் பணிசெய்யும் நிறுவனத்தின் சார்பில் நியூ பார்க் ஹோட்டலின் பால் ரூமில் நடத்தப்படும் அன்னையர் தின விழா!

இந்த ஆண்டு 'சிறந்த அன்னை'யாகக் குணாவின் தாயைத் தேர்ந்தெடுத்துப் பொன் ஆடை போர்த்தி, மாலை அணிவித்தார்கள். 'குழந்தையை மடியிலேந்திய தாய்' உருவ நினைவுச் சின்னத்தோடு ஆயிரம் வெள்ளி பணமுடிப்பையும் அளித்துப் பாராட்டினார்கள்.

நிறுவனத்தைச் சேர்ந்த ஒருவர் 'சிறந்த அன்னையை' வாழ்த்திப் பேசினார்:

"எல்லோருக்கும் வணக்கம்! ஒவ்வோர் ஆண்டும் ஓர் அன்னையை நாம் தேர்ந்தெடுத்து அன்னையர் தினத்தன்று சிறப்பிப்பது வழக்கம். காரணம் பணி செய்ய வரும் பெண்களை வரவேற்பதும் அவர்களின் குடும்பப் பொறுப்பைச் செவ்வனே நிறைவேற்ற ஊக்கப்படுத்துவதும் ஆணுக்கு நிகரானவர்கள் என்பதை நிறுவுவதும் காலத்தின் கட்டாயம். சிங்கப்பூர் வளர்ந்துவிட்ட நாடானாலும் சில நேரம் இங்கும் அது தேவைப்படுகிறது.

தாயின் சிறப்புகளை இப்போதெல்லாம் திரைப்படங்களிலும் கதைகளிலும் கவிதைகளிலும் வேண்டிய அளவு சொல்லிக்கொண்டே வருகிறார்கள். அதனால், அதைப்பற்றிச் சொல்லாமல், சிறந்த தாயை நாங்கள் ஏன் ? எவ்வாறு ? தேர்ந்தெடுத்தோம் என்பதைச் சொல்லியே ஆகவேண்டும்.

கணவன் சொல்லுக்குக் கட்டுப்பட்டு வாழ்வது என்பது ஒரு முறை; தன் சொல்லுக்குக் கணவனைக் கட்டுப்படுத்துவது என்பதும் ஒரு முறை. சரியில்லையென்றால் கணவனைத் திருத்துவது என்பது ஒரு முறை. அல்லது தன் செயலால் கணவனைத் தானாகத் திருந்த வைப்பது என்பது இன்னொருமுறை.

எல்லாப் பிள்ளைகளும் முதல் மதிப்பெண் எடுக்க முடியாது. அடுத்தடுத்த மதிப்பெண்கள் எடுக்கும் மாணவர்கள் வாழ்வில் முன்னேற்றம் காண்பது முடியாத காரியமா? அப்படியானால் படிக்காத காமராசர் தமிழ் நாட்டின் முதல்வராகி இருக்க முடியுமா........? (கைதட்டல்கள்)

பொருளாதாரத்தை ஈட்டுவது என்பதை அடிப்படையாக வைத்துத்தான் கல்வியின் போக்கு மாறிப்போய்க்கொண்டிருக்கிறதோ என்ற கேள்வியும் நம்மிடையே எழாமலில்லை. பொருளீட்டுவதே முக்கிய நோக்கம் என்றால், அதற்குப் பலவழிகள் உள்ளன என்பதைப் பெற்றோர்கள் பலர் எண்ணிப் பார்ப்பதில்லை.

வெறும் பாஸ் மார்க் வாங்கி வந்த மகனால் வாழ்வில் முன்னேற்றம் காணமுடியாது என்கிற தந்தையின் தீர்மானத்திலிருந்து வேறுபட்டு நின்று, நமது இன்றைய சிறந்த அன்னை பாரதியின் புதுமைப்பெண்ணாகி அன்று சிந்தித்தார். அதன் விளைவாகத்தான் இன்று இந்த நாற்காலியில் அமரவைத்துப் பாராட்டப்படுகிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்வதிலே பெருமையடைகிறேன்.

பெற்றோர்தம் ஆசையைப் பிள்ளைமேல் திணித்துவிட்டு அவனை ஏசுவது எந்த விதத்தில் நியாயம்? அவன் புத்திசாலித்தனத்தில், திறமையில் குறைவாகவா போய்விட்டான்? டாக்டர், எஞ்சினியர், வக்கீல் மட்டும்தான் படிப்பா? எல்லோரும் டாக்டராக நினைத்தால் முடியுமா? கைகால் கண்கள் விளங்காமலா போய்விட்டான்? அவனிடம் என்ன திறமை இருக்கிறதோ, அதில் மேலே வருவான் என்று அன்று கணவனிடம் மனதுக்குள் சவால் விட்டவர். மகனின் ஆர்வத்தைக் கண்டுபிடித்து, அவன் வழியில் செல்வது; அவன் திறமையை ஊக்கப்படுத்துவது; அதற்கு உறுதுணையாக இருப்பது – என்று இந்த அன்னை அன்று முடிவெடுத்தார்.

மகன் ஓவியக்கலையில் ஆர்வமாக இருக்கிறான் என்பதைக் கண்டறிந்தார். 'பொய்ம்மையும் வாய்மை உடைத்த' என்ற வள்ளுவனைத் துணைக்கு அழைத்துக் கொண்டார். அவன் கிறுக்கிய ஓவியத்தை எல்லாம் மோனலிசா ஓவியத்தைப் போல் புகழ்ந்தார். நவீன ஓவியம், அதற்குள் ஆயிரம் விழுமியங்கள் ஒளிந்து கிடக்கின்றன என்று ஜப்பான்காரர் சொன்னதாக மகனிடம் பொய்யுரைத்தார்.

ஒருமுறை கடல் மணலில் மகன் கட்டிய கோபுரம் சுமாராகத்தான் இருந்தது. ஆனால், வருவோர் போவோரிடம் 'என் மகன் உருவாக்கிய அழகிய சிற்பத்தைப் பாருங்கள்!' அழகாக இருக்கின்றதென்று மற்றவர்களையும் புகழ வைத்தார். படமெடுத்து வந்து கிராபிக் வேலை செய்து உண்மையிலேயே அழகாக்கி வீட்டுச் சுவரில் மாட்டி, வீட்டுக்கு வருவோரிடம் எல்லாம் காட்டி மகன் முகத்திற்கெதிரே பாராட்டச் செய்தார். அவன் வரைந்த படமெல்லாம் மிகுந்த விலைபோனதாகப் பொய்சொல்லித் தம் பணத்தையே அவன் கரத்தில் கொடுத்து மகனுக்குத் 'தான் உண்மையிலேயே நன்றாகத்தான் வரைகிறோம்' என்கிற எண்ணத்தை உருவாக்கினார்.

தொடரும்...



# செந்தமிழ்ச் செம்மல் நா.கதிரைவேற்பிள்ளை...

(21.12.1871 - 26.03.1907)



அ.செல்வபாரதி
ஆய்வியல் நிறைஞர், சென்னை

சதாவதானி, ஈழத் தமிழறிஞர், சைவச் சமயப் பணியும் தமிழ்ப் பணியுமே தனது வாழ்வாகக் கொண்டவர், கேட்டாரை வயப்படுத்தவல்ல நாவன்மையர். தருக்கத்தில் மிகத் தேர்ந்தவர். சைவ சமயத்தில் ஆழ்ந்த பற்றாளர். சிவநெறியே உயர்நெறி என்பதைப் பிற சமயத்தாரொடும் வாதிட்டு வென்றமையால், ‘அத்வைத சித்தாந்த மகோத்தரணர்’ என்றும், ‘மாயாவாத துவம்சக் கோளரி’ என்றும் பாராட்டப்படும் சிறப்புடையவர். தமிழ்த் தென்றல் திரு.வி.கவின் ஆசிரியர், தமிழுக்கென மொழி அகராதி இயற்றியவர் எனத் தம் தொண்டினால் புகழ்பெற்றவர் நா. கதிரைவேற் பிள்ளை.

இவர் இலங்கையில் யாழ்ப்பாணம் பருத்தித்துறை, மேலைப்புலோலியில் வாழ்ந்த நாகப்பபிள்ளை என்பவருக்கும் சிவகாமி அம்மையாருக்கும் திசம்பர் மாதம் 21ஆம் நாள் 1871ஆம் ஆண்டு பிறந்தார்.

## இளமைக் கல்வியும் வாழ்க்கையும்

கதிரைவேற் பிள்ளை அவர்கள் தம் ஊரிலிருந்த சைவப் பிரகாச வித்தியாசாலையில் தொடக்கக் கல்வி பெற்றார். குடும்பத்தின் வறுமைச் சூழலால், ஆறாம் வகுப்புக்கு மேல் பள்ளிப் படிப்பைத் தொடர இயலவில்லை. ஆறுமுக நாவலரின் மாணாக்கராகிய மகாவித்துவான் தியாகராசப்பிள்ளை என்பாரிடம் முறையாகக் கல்வி கற்றார். பதினெட்டு வயதிற்குள் தொல்காப்பியம் முதலிய இலக்கணங்களையும் சங்க நூல்களையும் தருக்க சாத்திரங்களையும் கற்றார்.

இவருக்கு வடிவாம்பிகை அம்மையாருடன் 1889ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. சிதம்பரம் பிள்ளை என்பாரிடம் பத்திரம் எழுதுபவராகப் பணி செய்தார்.

## சென்னை பயணமும் தமிழ்த்தொண்டும்

கதிரைவேற் பிள்ளை தமிழ்ப் பணியின் மீது கொண்ட நாட்டத்தினால் சென்னைக்கு வந்தார். சென்னையில் தி.த.கனக சுந்தரம்பிள்ளை, சபாபதி நாவலர் ஆகிய பெருமக்களோடு தொடர்பு கொண்டார். தி.த. கனகசுந்தரம் பிள்ளையின் உதவியுடன் சைவ சித்தாந்தச் சாத்திரங்களிலும் புலமை பெற்றார். வடமொழியிலும் தேர்ச்சி பெற்ற கதிரைவேற் பிள்ளை, சென்னை ரிப்பன் அச்சகத்தின் அதிபர் சிவசங்கரன் செட்டியாரின் பழக்கத்தால், தாள்

திருத்தும் பணியை ஏற்று, படிக்கின்ற காலத்திலேயே, சென்னையில் செலவுக்கு வேண்டியதை ஈடு செய்து கொண்டார்.

ஆரணி அரசவைப் புலவராகவும் மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவராகவும் விளங்கிய இவர், ஆங்கிலேயருக்குத் தமிழ் கற்பிப்பவராகவும் இருந்தார். சிறந்த பேச்சாளராகவும் திகழ்ந்தார். 1897ஆம் ஆண்டு முதல் இராயப்பேட்டை வெஸ்லி கல்வி நிலையத்தில் தமிழாசிரியராகப் பணி செய்தார். அக்காலத்தில் தான் இவரிடம் கல்வி கற்கும் பேறு பெற்றார் தமிழ்த் தென்றல் திரு.வி.க. 'கதிரைவேற் பிள்ளை சரித்திரம்' என்னும் நூலே, திரு.வி.க. இயற்றிய முதல் நூலாகும்.

கதிரைவேற்பிள்ளையின் பேச்சுத் திறன், சென்னையில் மட்டும் அல்லாது, தமிழகமெங்கும் புகழ் பெற்றது. தமிழ் நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று, தமிழ் மொழியின் செழுமைக்கும் சைவ நெறியின் வளர்ச்சிக்கும் உரையாற்றிப் புகழ் பெற்றார்.

## அகராதி தொகுத்தல் பணி

சென்னை வாழ் தமிழறிஞர் பலருடைய வேண்டுகோளுக்கிணங்கத் தமிழ்ப் பேரகராதி (தமிழ்–தமிழ் அகராதி) படைத்து 1899ஆம் ஆண்டு வெளியிட்டார். முன்னர்ப் பல தமிழறிஞர்கள் தொகுத்திருந்த மொழி அகராதியையும் ஆராய்ந்து மேலும் பல புதிய சொற்களைத் தொகுத்துத் தமிழின் சிறந்த பேரகராதியினை உருவாக்கினார். இவ்வகராதியின் பெருமையைப்,

**"பூவில் இடைகடை ஆதி எழுத்தின்**
**முன்பேருறப்**
**பதித்த புத்தகங்கள்**
**யாவும் இடைகடை எனவே யாழ்ப்பாணப்**
**புலோலி நகரின்மாசீர்த்தி**
**பாவுபுதுச் சந்நிதியான் அருட் கதிரைவேற்**
**புலவன் பதித்த மேன்மை**
**மேவும் அகராதியிதே முதலதெனக்**
**கிதின்பெயரே**
**விளங்கும் அன்றே."**

என்று தஞ்சை சதாவதானம் சுப்பிரமணிய ஐயர் புகழ்ந்திருக்கிறார்.

## சதாவதானி

ஒருவர் ஒரே நேரத்தில் கவனம் சிதறாமல் நூறு செயல்களைச் செய்தால் சதாவதானி என்பர்.

கதிரைவேற்பிள்ளை செய்த சதாவதானம் பலர் முன்னிலையில் நடந்து வெள்ளைக்காரத் துரைகளால் பாராட்டப்பட்டது. கதிரைவேற்பிள்ளை முதலில் யாழ்ப்பாணம் மேலைப்புலோலி கந்தசுவாமி கோவிலில் நன்னூல் காண்டிகையுரை ஆசிரியர் வித்துவான் அ. குமாரசாமிப் புலவர் தலைமையில் 18 அவதானங்களைச் செய்து முடித்தார். பின்னர்ச் சென்னையில் லெட்சுமி விலாச நாடகசாலையில் பாலசரசுவதி ஞானானந்த

சுவாமிகள் தலைமையில், 100 அவதானங்களைச் செய்து சதாவதானி என்ற பட்டத்தினைப் பெற்றார்.

மேலும் நாவலர், சைவசித்தாந்த மகாசரபம், அத்துவித சித்தாந்த மகோத்தாரணர், மகாவித்துவான், பெருஞ்சொற்கொண்டல் முதலிய பட்டங்களையும் பெற்றுள்ளார்.

## மருட்பா மறுப்பு

சைவத் தமிழ் உலகம் போற்றும் திருமறைகளே 'அருட்பா' என்றும் வள்ளல் பெருமான் இராமலிங்கர் பாடியுள்ளவை 'மருட்பா' என்றும் சைவநெறிப் பற்றால் கூறத் துணிந்தார் கதிரைவேற்பிள்ளை. கூறியதோடு, இராமலிங்க சுவாமியின் பாடல்கள் மருட்பாவே அன்றி, அருட்பா அல்ல எனக் கதிரைவேற்பிள்ளை 'மருட்பா மறுப்பு' எழுதினார்.

## இயற்றிய நூல்கள்

தமிழ்ப் பேரகராதி, இலங்கைக் கதிர் காமம் தலம் பற்றிய கலம்பகம், சுப்பிரமணியப் பராக்கிரமம், அதிவீரராம பாண்டியனாரின் கூர்மபுராண விளக்க உரை, பழநி தலப் புராண விருத்தியுரை, திருவருணைக் கலம்பக உரை, சிவராத்திரி புராண உரை, நைடதம் விளக்கவுரை, சிவசேத்திராலய மகோற்சவ விளக்கம், திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் சரித வசனச் சுருக்கம், ஏகாதசிப் புராணத்திற்கு அரும்பதவுரை ஆகிய நூல்களும் அதுமட்டுமின்றிப் பல சைவசமய நூல்களும் இயற்றியுள்ளார். மேலும் சித்திரக் கவிகள், கமல பந்தனம், கோபுரப் பந்தனம், ரதப் பந்தனம், இரட்டை நாகப் பந்தனம், சிலேடை வெண்பா, யமகம் நிறைந்த கட்டளைக் கலித்துறை வெண்பா, கருவூர் மான்மியம் (மகாத்மியம்), சீட்டு கவிகள் பல எழுதியுள்ளார்.

நாவன்மையும் உரைவன்மையும் தொகுப்புத் திறமும் கவனகச் செல்வமும் ஒருங்கே கொண்ட கதிரைவேலர் தமிழ்ப் பணிக்காக, அடிக்கடி சென்னையிலிருந்து நீலகிரி சென்று வந்தார்.

1907ஆம் ஆண்டில் ஒருமுறை நீலகிரி சென்றபோது, குன்னூரில் கடுஞ்சுரத்தால் உடல் நலிவுற்று 26.03.1907 அன்று இயற்கை எய்தினார்.

இவரின் வாழ்க்கை வரலாற்றினைத் திரு.வி.க. "யாழ்ப்பாணம் தந்த சிவஞானதீபம் சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை சரிதம்" என எழுதி 1908இல் வெளியிட்டார்.

பாலசுந்தர நாயகர் என்பவர் ஸ்ரீமான் நா. கதிரைவேற் பிள்ளை அவர்கள் சரித்திரமும் அவரது பிரிவாற்றாமையினால் பல புலவசிகாமணிகளார் கூறிய பாக்களும் என்ற நூலாக 1908ஆம் ஆண்டு வெளியிட்டார். இவ்விருவரும் கதிரை வேலரின் மாணாக்கர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இத்தகு சிறப்பு வாய்ந்த தமிழறிஞரின் தொண்டினைப் போற்றிடும் வண்ணம் நாமும் நம் தமிழுக்கு நம்மால் இயன்ற தமிழ்ப்பணி செய்வோமாக!

தடம்

## மலேசியத் தமிழறிஞர்

# இர.ந.வீரப்பனாரும் தமிழும்...



## திரு. இர.ந.வீரப்பனாரும் தமிழும்

(1930 - 1999)

இலங்கையில் தோன்றி உலகத் தமிழர்களுக்காக குரல் கொடுத்தவர்களில் குறிப்பிடத்தக்கவர் வீரப்பனார். மலேசியாவில் புலம்பெயர்ந்து 1953இல் ஈச்சமரத் தோட்டத் தமிழ்ப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றியவர். உலகத் தமிழர் குரல் என்ற மாத இதழையும் நடத்தி வந்தார். உலக நாடுகளுக்கெல்லாம் பயணம் செய்து தனது களஆய்வுப்பணி மூலம் 43 நூல்கள் வெளியிட்டுள்ளார்.

சிறுகதை, ஆய்வுக் கட்டுரை, இலக்கிய நாடகம், மொழிப்போராட்டம், உலகளாவிய பண்பாட்டுத் தொடர்புகள் ஆகிய பல பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். தமிழ் இலக்கியக் கழகம் என்ற அமைப்பைத் தோற்றுவித்தவர். மலாய் தமிழ் ஆங்கில அகராதி, மலேசியத் தமிழர்கள், உலகத் தமிழர், கானல் வரி, உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க வரலாறு, இலக்கிய இதயம் உள்ளிட்ட நூல்களை இயற்றியவர். இலங்கையில் பிறந்து மலேசியாவில் தமிழ்ப் பணியாற்றிய வீரப்பனாரின் தமிழ்ப் பணிகளைப் போற்றுவோம்!.

# பழமொழி இது புதுமொழி

முனைவர் **உ. அனார்கலி**
மதுரை



இலக்கைக் கொண்டது இலக்கியம். உணர்ந்ததை, கற்பனையோடு கலந்து, தான் விரும்பியதை அமைத்து, படிப்பவர் மனதில் அறச் சிந்தனை, சிறந்த உணர்வு தோன்றும்படி தமிழ் இலக்கியங்கள் அமைந்துள்ளன. படிக்கும் வாசகன் தன்னைத் தானே உற்று நோக்க உறுதுணை புரிவது இலக்கியம். அழகு நிரம்பியது மனித மனம். ஆயினும் சில சமயங்களில் அரக்கக் குணத்தின் பிடியில் சிக்கிக் கொள்ள நேர்வது உண்டு. அரக்கக் குணத்திற்கு ஆட்படும் பொழுது இலக்கியம் படித்தவர்கள் தன்னை அவ்வலையிலிருந்து எளிதில் மீட்டுக் கொள்வார்.

தன்னை உணரச் செய்வது, சூழலைப் புரியவைப்பது, உலகை விரும்பக் கற்றுத்தருவது, பகிர்ந்துண்ண பழகித் தருகிறது. நல்லனவற்றை இனங்காணக் கற்றுத் தரும் நேரத்தில் அல்லனவற்றையும் அடையாளம் காட்டுகிறது இலக்கியம். அறியாமை, அறிவை வேறுபடுத்திக் காட்டுவது இலக்கியம். தமிழ் இலக்கியம் காலந்தோறும் வடிவத்தை மாற்றியமைத்து வளர்ச்சி கண்டு வந்துள்ளது. அக, புறப் பாடல்களைக் கொண்டிருந்தது சங்க இலக்கியம் அதைத் தொடர்ந்து காப்பிய இலக்கியம், பின் பக்தி இலக்கியம், அதன் பின் அற இலக்கியம், புதுக்கவிதைகள் என வடிவம் புதிதாகக் கொண்டது போல், உணர்த்த எடுத்துக் கொண்ட பொருளும் புதிதாக விளங்குகின்றன. ஆயினும் இலக்கியத்தின் ஊடே அறக் கருத்து ஊடுருவத் தவறவில்லை.

தமிழில் உள்ள அறநூல்களில் ஒன்று பழமொழி நானூறு. பழமொழி நானூறு என்ற நூலை முன்றுறையரையனார் என்ற புலவர் இயற்றியுள்ளார், பழமொழி நானூறு எனும் நூலில் கடவுள் வாழ்த்தையும் சேர்த்து 401 பாடல்கள் உள்ளன. நான்கு அடிகளால் ஆன வெண்பா. இதன் பாடல்களில் ஆசிரியர் ஒரு புதுமையைப் புகுத்தியுள்ளார். அப்புதுமை நூலின் பெயராக அமைந்துள்ளது. சொல்ல வந்த கருத்துக்கு வலுசேர்க்க, நன்கு விளங்கிக் கொள்ள ஆசிரியர் காலத்து வழங்கி வந்த அனுபவத்தின் வெளிப்பாடான பழமொழியை இணைத்துள்ளமை சிறப்பாகும். பழமொழி சொல்ல வந்ததை சுருக்கமாகவும் மனதில் காட்சி தோன்றவும் துணைபுரிகிறது.

“அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது” என்றார் ஔவை. மானிடப் பிறப்பு சில காலத்துள் நிறைவடைந்துவிடும். வாழும் காலத்தில் அன்பு நிறைந்தவனாய் வாழ்தல் அவசியம். தனக்கு வேண்டியதை, விரும்பியதை

அன்பின் வழிநின்று நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் அல்லாமல், அதிகாரத்தால் நிறைவேற்றுவது கூடாது பசுவிலிருந்து அதிகப் பால் கறக்க வேண்டும் எனில் முதலில் கன்றினைக் குடிக்கச் செய்தல் வேண்டும். அப்பொழுது பசு கன்றின் மீது கொண்ட பாசத்தின் காரணமாய் அதிகப் பால் கொடுக்க ஆயத்தமாகும். கன்றுக்கும் பயனாளருக்கும் பால் நிறையக் கிடைக்கும் அதை விடுத்து, பசுவை அடித்துத் துன்புறுத்திப் பால் கறக்க நினைத்தால் சிறிதளவுகூட பால் கறக்க இயலாததைப் போல், அதிகாரத்தால் எதையும் சாதிக்க இயலாது என்கிறார்.

**“அன்பின் நெகிழ வழிபட்டுக் கொள்ளாது**
**நின்ற பொழுதின் முடிவித்துக் கொள்வது**
**கன்று விட்டு ஆக்கறக்கும் போழ்தில் கறவானாய்**
**அம்பு விட்டு ஆக்கறக்கும் ஆறு”**

**(பழமொழி.13)**

இறுதி அடி இரண்டிலும்

**“கன்றுவிட்டு ஆக்கறக்கும் போழ்தில் கறவானாய்**
**அம்புவிட்டு ஆக்கறக்கும் ஆறு”**

என்ற பழமொழி வந்துள்ளது. அன்பே அனைத்துக்கும் அடிப்படை என்பதை இப்பழமொழி எடுத்தியம்புகிறது. வள்ளுவரும் ‘அன்பின் வழியது உயிர் நிலை’ என்றார்.

செல்வத்துப் பயன் ஈதல் – அதுதான் சிறப்பு. நல்லார் ஒருவரிடம் உள்ள செல்வம் ஊரின் நடுவே உள்ள பழுத்தமரம் எல்லோருக்கும் பயன்படுவது போல் அனைவருக்கும் பயன்பட வேண்டும். தானும் அச்செல்வத்தை நுகர்தல் வேண்டும். பிறர்க்கு வழங்கிய, செல்வத்தை நுகராவிடில் அச்செல்வத்தால் எந்தப் பயனும் கிடையாது. “நாய்க்குத் தேங்காய் ஒன்று கிடைக்குமாயின் அதை உடைத்து உண்ணத் தெரியாமல், பிறர்க்கும் வழங்காமல் தானும் நுகராமல் இருப்பவரின் செல்வம்” என்கிறது பழமொழி நானூற்றின் 151வது பாடல்,

**“வழங்கலும் துய்த்தலும் தோற்றாதான் பெற்ற**
**முழங்கு முரசு உடை செல்வம் தழங்கு அருவி**
**வேய் முற்றி முத்து உதிரும் வெற்ப, அது அன்றோ**
**நாய் பெற்ற தெங்கம்பழம்”**

**(பழமொழி நானூறு.151)**

ஒவ்வொரு பாடலிலும் ஒரு பழமொழி இடம் பெறுகிறது. கூடவே ஒரு அறக்கருத்தையும் வெளிப்படுத்துகிறது.

5ஆம் நூற்றாண்டில் தோன்றிய அற இலக்கிய நூல்களுள் ஒன்றான பழமொழி நானூறு, அதன் காலத்து மொழிப் பண்பாட்டையும் பயன்பாட்டையும் வாழ்வியல் முறைகளையும் படம் பிடித்துக் காட்டும் அதே நேரத்தில் இலக்கியத்தின் புதிய உத்தியையும் வெளிப்படுத்துகிறது■

# உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

## யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம், இலங்கை

இணைந்து நடத்தும்

**'உலகத் தமிழ் இலக்கிய விழா'** (இலக்கிய நிகழ்ச்சி)



## பட்டிமன்றம்

### சமுதாய மாற்றத்தைச் சாதிக்கும் ஆற்றல்

### பேச்சுக்கா? எழுத்துக்கா?

**நடுவர்**

'சாலமன் பாப்பையா பட்டிமன்றப் புகழ்'

திரு. **இராஜா** மதுரை

**பேச்சுக்கே!**

திரு. **கருணாநிதி** நாகர்கோயில்

முனைவர் **ரேவதி சுப்புலெட்சுமி** மதுரை

செந்தமிழ்ச் சொல்லருவி **ச.லலீசன்** இலங்கை

**எழுத்துக்கே!**

திருமதி **மெய்யரசி** மதுரை

சைவப்புலவர் **கு.றஜீபன்** இலங்கை

திரு. **இராஜ்குமார்** இராஜபாளையம்

நாள் : 23.12.2022

நேரம் : பிற்பகல் 2.00 மணி

இடம்: கலையரங்கம், உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

**அனுமதி இலவசம்..! அனைவரும் வாரீர்..!!**

# உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

## யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம், இலங்கை

இணைந்து நடத்தும்

**'உலகத் தமிழ் இலக்கிய விழா'** (இலக்கிய நிகழ்ச்சி)

## பன்னாட்டுக் கவியரங்கம்

### தமிழே நீ! எங்களின்...



தலைமை

கவிஞர் **ஆண்டாள் பிரியதர்ஷினி** சென்னை

கவிஞர்கள்

**அறிவாக...**

கவிஞர் **தஞ்சை இனியன்** தஞ்சாவூர்

**அன்பாக...**

சைவப்புலவர் **கு.றஜீபன்** இலங்கை

**ஆற்றலாக...**

கவிஞர் **அ.ரோஸ்லின்** மதுரை

**வெற்றியாக...**

கவிஞர் **மூரா** மதுரை

**கொள்கையாக...**

கவிஞர் **பா.மகாலட்சுமி** மதுரை

**வீரமாக...**

கவிஞர் **ஈசுவர ராஜா** மதுரை

நாள் : 22.12.2022

நேரம் : பிற்பகல் 4.30 மணி

இடம்: கலையரங்கம், உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

**அனுமதி இலவசம்..! அனைவரும் வாரீர்..!!**

# உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

## வேறெங்கும் இல்லாத வசதிகளுடன்
## மதுரையில்...

நகரின் மையப் பகுதியில்...
குறைந்த வாடகையில்...
நிறைந்த வசதிகளுடன்...
அரங்குகள் வாடகைக்கு....

கலையரங்கம்





### சிறப்பம்சங்கள்

- 400 பேர் அமரும் கலையரங்கம் ...
- 200 பேர் அமரும் இரண்டு கூட்டஅரங்கம்...
- 300க்கும் மேற்பட்டோர் உணவருந்தும் திறந்தவெளி உணவுக்கூடம்
- கண்காட்சி மற்றும் கடைகள் அமைப்பதற்கான விசாலமான இடவசதி
- சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்
- தூய்மையான கழிப்பறை
- பிரம்மாண்டமான மேடை அமைப்பு
- மின்காட்சி வெளியிடும் வசதி
- 24மணி நேர மின்சாரம்
- விசாலமான வாகனம் நிறுத்தம்
- பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான போட்டிகளுக்கு...
- அரசு சார்ந்த நிகழ்வுகள் மற்றும் விழாக்களுக்கு...
- சமயச் சார்பற்ற நூல்கள் வெளியிட...
- பண்பாடு, கலை, இலக்கியம் தொடர்பான நிகழ்வுகளுக்கு...

கூட்ட அரங்கம்






**பதிவுசெய்ய அணுகவும்...**

உங்கள் நிகழ்வுகள்
நீங்காத நினைவுகளாக
வாழ்வில் நிலைத்திருக்க...
உடனே முன்பதிவு செய்யுங்கள்...

**தொடர்புக்கு...**

0452–2530766/2530799
utsmdu2@gmail.com

முன்பதிவிற்கு
உடனே அணுகவும்

Uts Mdu @TamilUlaga
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை




## படைப்புகள் வரவேற்பு...

உலகத் தமிழ்ச் சங்கம் மதுரையின் சார்பில் திங்கள்தோறும் வெளிவந்து கொண்டிருக்கும் உலகத்தமிழ் மின் ஆய்விதழுக்குக் கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், ஓவியங்கள் வரவேற்கப்படுகின்றன. படைப்புகள் தங்களின் சொந்தப் படைப்பாகவும் இதுவரை வெளியிடப்படாதவையாகவும் இருத்தல் வேண்டும். படைப்பாளர்கள் தங்களின் படைப்புகளை அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி : utsmdu2@gmail.com (குறிப்பு: ஆசிரியர் குழுவால் தெரிவு செய்யப்படும் படைப்புகள் மட்டுமே இதழில் வெளியிடப்படும். படைப்புகளைத் திருத்தியமைக்க ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு).

நன்றி!

– ஆசிரியர்



# உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

## வெளியீடுகள்




**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**

இயக்குநர்,
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை
மருத்துவர் தங்கராசு சாலை,
சட்டக் கல்லூரி அருகில்,
மதுரை – 625020.

தொலைபேசி எண்:
0452 – 2530799
மின்னஞ்சல் முகவரி :
utsmdu.research@gmail.com